
# முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

2 அணா

முரசு 1 | சென்னை | 22 — 10 — 54 | வெள்ளி | ஒலி 30

## கவிதையல்ல; எழுச்சி ஏடு!

(2)

### ஔவைத் தாயார்

பொதிகைமலை— பொன்னிநதி — தென்றல் காற்று
இவை மூன்றும் தமிழகத்தின் புகழ்சேர்க்கப் —போதுமென்று,
அதியமான் நெடுமான் அஞ்சி என்றோர் வேந்தன்
இம்மண்ணில் வாழுகின்றான் கொடை வளர்க்க
என மகிழ்வாள் தமிழ்க்கிழவி ஔவைப் பாட்டி!

★ ★ ★

அவள் ஒருநாள்—அதியமானை எதிர்த்து நின்ற
தொண்டை நாட்டு முடிமன்னன் தொண்டமானை
போர் மூள்தல் தீதெனவே கூறுதற்குச் சந்தித்தாள்.
அது போது அம்மன்னன் ஔவைதனை அழைத்துச் சென்று
அவன்நாடு வெல்வதற்கு அமைந்துள்ள பாசறையைக் காண்க என்றான்.

★ ★ ★

கூர் மழுங்கா ஈட்டிகளும் — கொத்திக் குடலெடுக்கும் கோடரியின் பளபளப்பும்
பார் முழுதும் பார்த்தாலும் இந்த மழுங்காத வாட்கூட்டம்
யாராலும் பார்க்க இயலாது
எனத் தக்கப் போர்வாள் ஆயிரமும்
ஔவை கண்டாள்—சிரித்து விட்டாள்!
சிரிப்புக்குப் பொருள் என்ன என்று வேந்தன்,
நெருப்பொக்கும் கண்ணால் கேட்டான்.
"மன்னா கேள்! கூர் மழுங்காப்
படைக்கலங்கள் உன்னுடைய பாசறையில்!
எந்தன் அதியமான் பாடிவீட்டில்,
அத்தனை கருவிகளும் சொத்தைகளாம்!
ரத்தம் படிந்தவாட்கள்—பகைவர் மூடி
குத்திக் கிழித்ததாலே முனை முறிந்த ஆயுதங்கள்!
உன்னிடமோ—களம் புகா காரணத்தால்
புதுமை குலையா போர்க் கருவி!
எம் மன்னனிடமோ—களம் தழுவிக்
கலனான வேல், வாள், ஈட்டிகளாம்!
என்று பழிப்பதுபோல் புகழ்ந் துரைத்தாள்
அதியமானை, ஔவைத் தாயார்!
அதுகேட்டு, தலை[illegible]தி நின்றான் — எதிர்த் தூரல்
எது கேட்டும் [illegible]
[illegible]ண்டமானும்

— கருணா

Best copy available

# ★ வேதனையாம், வேதனை! ★

ஏழைகள் வாழும் சேரிகளைப் பற்றிச் சிந்திக்கும் போது, இடிந்து போன சேரிகளை வைத்துக்கொண்டு அதன் மூலம் பணம் பறிக்கும் சேரிச் சொந்தக்காரர்களைக் காணும் போது, அந்தச் சேரிகளுக்குக்கூட அவர்கள் நஷ்ட ஈடு கேட்கும் போது, குருதி கொதிக்கிறதாம் இந்தியத் துணைக் கண்டப் பிரதமராம் பண்டிதருக்கு!

நல்லன பாராட்டி, அல்லன கண்டிக்கும் தி. மு. கழகத்தின் உயர் தனிப் பண்பின் அடிப்படையிலே, புது ஞானம் பெற்ற பண்டிதரின் இந்தப் போக்கு கண்டு பேராச்சரியமுறுகிறோம். பண்டிதருக்கு ஏற்பட்ட இந்தப் புத்தறிவுக்குக் காரணம், பம்பாய் சர்க்கார், சேரி வாழ் மக்களுக்காகச் செய்யும் முயற்சிக்காக, மத்திய சர்க்கார் பண உதவி அளிக்க வேண்டுமென, பம்பாய் மேயர் கேட்டுக் கொண்டதேயாகும். பம்பாய் வாழ் சேரி மக்களின் துயரத்தைக் கேட்டு பண்டிதரின் உள்ளம் பதைக்கிறது! இரத்தம் கொதிக்கிறது! ஆனால், இங்கே திராவிடத்தில்? இன்றல்ல நேற்றல்ல, பன்னூற்றாண்டுகளாய் இருந்து வரும் இழி நிலையை—சேரி, அக்ரகாரப் பாகுபாட்டை— சாதி பல உண்டு எனும் சழக்கர் தம் கூற்றுகளை அறிவுப் பிரச்சாரத்தால் அழித்து சமநிலைப் படுத்தும் திராவிட இயக்கத்தாரைப் பற்றி, "திராவிட இயக்கத்தாரின் புத்தகங்களைப் பார்க்க நேர்ந்தது; படித்தேன்; பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே இருக்க வேண்டியவர்கள் என்று தீர்மானிக்கிறேன்" என்று சிதம்பரம் எழுத்தாளர் மாநாட்டிலே நேரு கூறியதை, இந்தக் குறுகிய காலத்திலே, நாம் மறந்துவிட முடியாது. நேற்று அப்படி! இன்று இப்படி!

பம்பாய்ச் சேரிவாழ் மக்களின் நிலைகுறித்து பச்சாதாபப்பட்டு, வெந்து, நொந்த உள்ளத்தோடு ஐயகோ! உங்களுக்கா இந்தக்கதி? என்று கனல் தெறிக்க உரை நிகழ்த்தும் பண்டிதனர் உணர வேண்டும் இதனை!

தென்னகத்து ஊர்களிலே, சேரியிலே வாழ்கின்ற மக்கள், நூற்றுக்கு தொண்ணூறு, கல்வி கற்க, வசதியற்றோர். சமுதாயத்திலே தாங்களும் மனிதர்கள் தான், எனக் கூறிக் கொள்ள வெட்கப்படுவோர்கள் ஊருக்கு ஒதுப்புறத்திலே ஓட்டைக் குடிசையிலே வாழ்வு நடத்துவோர், மனிதனென்று சொல்லவோ, மலைபோல நிமிர்ந்து நிற்கவோ தகுதியற்றவர்கள். இந்த இழிநிலைக்கு ஆக்கப்பட்டு விட்டார்கள். ஏன்? யாரால்? சிந்திக்கவில்லை பண்டிதர். அய்யர் பூசுகிறார் விபூதி! சேரியிலே வாழ்கிறானே அவனும் தான் பூசுகிறான் விபூதி! மதம், அந்த மதம்! கடவுள், அந்தக் கடவுள்! எனினும் அவன் இழிகுலத்தோன் இந்த நிலையை மாற்றத்தான் திராவிட இயக்கம் பெரும் பணி புரிகிறது.

★ ★ ★

"டேய், முத்தா!"

"ஏன் சாமி?"

"வரப்பெல்லாம், வெட்டியாச்சா?

"ஆமாங்க, வெட்டியாச்சுங்க"

"அதுசரி! உன்னைக் கேட்கணும்னு நினைச்சேன். உங்கசேரி ஆளுகளெல்லாம் சேர்ந்து, ஆதித் திராவிட சங்கம் ஏற்படுத்தியிருக்கிங்களாமே, நிஜந்தானா?"

"அது நிஜந்தாங்க, ஆனா, நான் அதிலே எல்லாம் சேருவதில்லீங்க.

"அதுதானே கேட்டேன், நீயும் ஒருவேளை அதிலே சேர்ந்துட்டியோன்னு நினைச்சேன்"

"நமக்கென்னத்துக்குங்க அதெல்லாம். இன்னைக்குத் தலை கால் தெரியாம ஆடினா, நாளைக்கு கஷ்டப்படாது நம்ம தானுங்களே"

"அதைத்தான் நானும் சொல்றேன். குதிரையின் குணம் தெரிஞ்சுதான்டா, கடவுள் அதுக்கு கொம்புகொடுக்கல்லே. யார், யாரை, எந்த எந்த இடத்திலே வைக்கணுமோ, எல்லாம் 'அவனு'க்குத்தெரியாம இல்லே. தெரிஞ்சுதாண்டா, பிராமணன்—பறையன், பள்ளன்னு சாதிகளை உண்டாக்கி இருக்கான்"

"ஆமாங்க! அவன் அவன் விதிப்படிதானுங்களே எல்லாம் நடக்கும்"

மேலே குறிப்பிட்ட உரையாடல் கற்பனைதான். எனினும், நாட்டிலே நடவாததல்ல. தாழ்ந்த சாதியிலே, தான்பிறந்ததற்குக் காரணம் ... 'தலைவிதி' என்று எண்ணுகிறான், அவன். உயர் குடிப்பிறந்தவனைக் கருதிக் கொள்பவனும், தனது உல்லாச வாழ்வுக்குக் காரணம், 'தலைவிதி'த் தத்துவம், தொத்திக் கொண்டிருப்பதே, என்று எண்ணுகிறான். இத்தீராத 'பழமை' வியாதியைத் தீர்த்து வைக்கும், அருமருந்துதான், தி. மு. கழகம். ஏழடுக்கு மாளிகையில், இனிக்கும் மொழிபேசி எழிலோச்சும் இன்பத்தில் இருந்து வாழ்ந்துவரும் நிலையிலே சிலரையும், கூழ் இல்லை கும்பிக்கு எனக் குமுறும் மக்கள் — குடிசையிலே கிடக்கட்டும் — வதையட்டும் என்று சிலரையும், இறைவன் தான் படைத்தான்! என்ற கூற்று ஏற்றுக்கொள்ளப் படும் போதுதான் இந்தஇறைதத்துவம் பற்றி நல்லறிவாளர்களால் எள்ளி நகையாடாமல் இருக்க முடியவில்லை. இதைத்தான் திராவிட இயக்கம் பகுத்தறிவின் மூலம் பறைசாற்றி வருகிறது.

இந்த சீர்திருத்தம் தான், முதல் தேவையும் — முக்கியத் தேவையுமாகும். அதை விடுத்து சேரியை ஒழித்து சேரியிலே வாழ்வோரைக் கல் வீட்டிலே வைத்தாலும், சாதிப் பாகு பாடு உள்ள வரை சமுதாயம் திருந்தாது—மாறாது. முதலிலே ஒழிக்கப்பட வேண்டியது சாதி! அது ஒழிந்தால் சேரியும் ஒழியும் —அக்காரமும்ஒழியும். பண்டிதர் கூறுவது இன்றுதான். தமிழனோ பண்டைக் காலத்திலிருந்தே—தொல்காப்பியர்காலத்திலிருந்தே வள்ளுவர் காலத்திலிருந்தே, ஏன்? சாதி என்று புகுத்தப் பட்டதோ, அன்றிலிருந்தே, இன்று திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியுள்ள வரை 'ஒன்றே குலம்! ஒருவனே தேவன்' என்று கூறிவருகிறான். சேரி ஒழிப்பு, தேவைதான்! ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அந்தச் சேரிகளை ஏற்படுத்தி சாதிகளை அடிபீடமாகக்கொண்ட அக்ரகாரம் தேவைதானா? என்று கேட்கிறோம்—இரத்தக் கொதிப்படைந்த இந்திய முதல்வரைப் பார்த்து!

பண்டிதருக்காவது, பம்பாயைப் பார்த்துத்தான் இரத்தம் கொதித்திருக்கிறது. ஆனால் எங்களுக்கு இங்கு வாழும் சேரி மக்களைப் பார்த்து — அதே நேரத்தில், அலுங்காமல், நலுங்காமல் ஆனந்த வாழ்வு நடத்தும் 'தளித்தெரு' வாசிகளைப் பார்த்துக் கொதித்த இரத்தம் குமுறிக் கொண்டே இருக்கிறது. கொழுந்து விட்ட தீ அணையவில்லை! புகைகிறது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று வள்ளுவன் வகுத்தவழி வாழ்வோம் என்றுதான் பார்ப்பனரையும் அன்புக்கரமேந்தி அழைக்கிறோம்.

சுப்பையரும், சுப்பையா செட்டியாரும், 'மாமன்' மைத்துனன்' உறவு முறை கொண்டாடும் அந்த நாளைத்தான் எதிர்பார்க்கிறோம்.

"காத்தான் மகனுக்கு, கிருஷ்ணசாமி அய்யங்காரின் அருமைச் செல்வியை பெரியோர்களால் நிச்சயிக்கப் பட்டு' இப்படிப்பட்ட திருமணச் செய்திகளை—தேனாக, தித்திக்கும் செங்கரும்பாக, தாங்கி வரும், அந்தநாள், எந்தநாள்? என்றுதான் ஏங்கிக் கிடக்கிறோம்.

குருதி கொதித்துப் பயனில்லை — சேரிகளை இடம்விட்டு இடமாற்றிப் பயனில்லை. சமுதாயம் திருத்தப் படாத வரையில் —சாதி ஒழியாத வரையில்!

பூவை—செங்குட்டுவன்.

## நன்றி

★

பேரன்புடையீர்,

வணக்கம்.

3-10-54 ஞாயிறன்று நடைபெற்ற திருச்சி மாவட்ட மன்றத் தேர்தலில் தங்கள் மேலான வாக்குகளை அளித்து வெற்றி பெறச்செய்த லால்குடி தொகுதி வாக்காளர்களுக்கும், வெற்றிக்காக அல்லும் பகலும் அரும்பாடு பட்டு எல்லா வகையிலும் ஒத்துழைத்த அருமை நண்பர்களுக்கும். பேராதரவு காட்டிய பொது மக்களுக்கும், வாழ்த்துகள் வழங்கிய தோழர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றியறிதலுள்ள வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பன்

அன்பில் தர்ம[illegible]

லால்குடி, 13-1[illegible]


★ முத்தாரம் ★

முரசொலி வெளியிடும் திங்கள் ஏடு

மிக விரைவில் வர இருக்கிறது நூல் வடிவில்!

விபரங்கட்கு:

'முரசொலி'

சென்னை-14.

# தலையங்கம்

சென்னை [ 22—10—54 ] வெள்ளி

## கல்லறை மீது கல்லக்குடி

★

''புயல் நிவாரண நிதிக்கு இருபத்தையாயிரம் கேட்டேன்--ஏறத்தாழ முப்பதாயிரம் திரட்டித்தந்தான் தம்பி— தி. மு. க. செயல் வீரர்களின் துணையுடன்! ஓய்வெடுத்துக் கோள்—ஊஞ்சலாடு! என நான், தம்பியை உற்சாகப் படுத்தப் போவதில்லை — இதைவிட அவனுக்கு உற்சாகமான ஒருவேலைக்கு அவனை அனுப்பப் போகிறேன்— கல்லக்குடி அறப்போர் தலைவனாக அனுப்ப இருக்கிறேன்'' என்று என் அண்ணா, தஞ்சை புயல் நிதியளிப்பு விழாவின்போது கூறினார்.

வெற்றி ஊர்வலம் வரட்டும்; இல்லையேல் என்சவ ஊர்வலமே காண்பீர்கள் என்று தில்லை மாநாட்டிலே நான் கூறியதுதான் தாமதம்; உடனே கலங்கிய கண்களுடன், என் அண்ணா—''சாவதற்கு உன்னை அனுப்ப வில்லையடா தம்பி—வெற்றியோடு வருவாய் — போய்வருக !'' என வாழ்த்தி நின்றார். இதோ, வெற்றிமலர்களை அவரெதிரே குவிக்கிறோம்—அவர் மகிழ்கிறார், காண்கிறோம். டால்மியாபுரம் கல்லக்குடியாக — மாற்றப் பட்டுவிட்டது! திராவிடர் பெருவெற்றி கண்டுவிட்டனர். புன்னகையும் பூரிப்பும் போட்டியிட்டுக் கிளம்பும் கண்ணீரும் நமது போராட்ட சரித்திரத்தின் ஒரு பொன்னேட்டை நினைவுறுத்தத்தான் செய்கின்றன. லால்குடி வீரன் நடராசனும், மணப்பாறைத் தோழன் குமாரவேலும், அரியலூர் கேசவனும் தங்கள் இளமையை அடியோடு பலி கொடுத்து— அழிந்து போயினர் — அதோ அவர்கள் சமாதிகள் தெரிகின்றன. அதனருகே உயரப் பறக்கும் நமது வெற்றிக் கொடியும் தெரிகிறது—

இந்த வெற்றிக்கொடி விண்ணிலே தவழ — அணிவகுத்து நின்றோர் அனைவருக்கும் வீரவணக்கம் செலுத்துகிறேன்; அறப்போரின் தலைவன் என்ற முறையிலே! அந்த வீரர்கள் அனைவரையும் அகக்கண்ணால் தழுவி மகிழுகிறேன்.

களத்திற்கு என்னை அனுப்பிய தலைவர் சிறைப்பட்டுவிட்டதால், தளபதியாக நின்ற நான்—உடனடி யோசனையை யாரிடமும் பெற நேரமில்லாமல்-வெற்றியை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு, போர் முறையில் ஏதாவது தேவையான மாற்றம் செய்திருப்பேன்—என் தலைவர் தங்கக்குன்று-இந்த மகிழ்ச்சிகரமான வேளையிலே அவைகளையெல்லாம் அவர் மறந்து, மன்னித்து, என்னை அரவணைத்துக் கொள்வதை—இருதயத்து விழிகளால் காண்கிறேன்--அந்த இன்பக் கனவு என்னை மெய்மறக்கச் செய்கிறது! இந்த வெற்றி அவர்கள் வெற்றி!

அருமைத் தோழர் சம்பத் ஒருகளம் புகுந்தார்—வெற்றிகண்டார். என்னையும் அண்ணா அனுப்பினார்; முழுவெற்றி முகிழ்க்காமல் இருந்தது—இன்றோ அந்த முழுநிலவு உதயமாகிவிட்டது! இந்த வெற்றி நிலவுக்கு வெளிச்சம் தந்த காஞ்சிக் கதிரவன்—இன்னும் எத்தனை களங்களுக்குச் செல்ல வேண்டுமெனகட்டளைகள் தந்தாலும், அவைகளைத் தலைமேலேற்று தாயகத்தை விடுவிக்கத் தயாராயிருக்கிறோம்—தரணி மீட்கும் படையிலே நானும் ஒருவன்—அண்ணாவின் சேனையிலே எனக்கும் ஓர் இடமுண்டு—இந்தப் பெருமை பெறுவது சாதாரணமா? பெறற்கரிய பேறு! அந்தப் பேறு பெற்றோம்—நாடு மீட்போம் !

வணக்கம்—வணக்கம்—வளர்க நமது வெற்றிகள்! வாழ்க தியாகிகளின் பெயர்கள் !

## விற்பனைப் பொருளா 'விடுதலை?'

உருத்தெரியாமல் ஆக்குகிறேன், உங்கள் உரிமைப் போரை என்று கொக்கரித்துக்கிடந்த கொடுமையாளர்கள் கப்பலேறுகின்றனர். ஆம்; இருநூறு ஆண்டுகளாக இந்த நாட்டின் ஒரு பகுதியை வளைத்திருந்த பிரெஞ்சுக்காரர்கள் நவம்பர் 1-ம் தேதியன்று மூட்டை முடிச்சுகளுடன் தாயகம் திரும்புகின்றனர். ஒரு காலத்தில் டூப்ளே துரைமகனின் திறல் மிகுந்த மூளைபலத்தை நம்பி வாழ்ந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியம் பின்னர் குண்டர்களின் தசை பலத்தை நம்பி அரசியல் சக்கரத்தை உருட்ட வேண்டிய நிலைமைக்கு ஆளாகி இப்போது அதுவும் முடியாமல் சொந்தநாடு திரும்புகிறது. இந்த நல்ல முடிவை அறிவித்த கீழூர் மாநாடு—பெட்டியுள் பாம்பாய் அடங்கி இருப்பவர் விஷம் கொட்டிட சீறிஎழும் நிலையை அடையுமுன்னர் மாறிவிடவேண்டிய புதுமையை—புத்தி சாதுரியத்தை எடுத்து விளக்கி சரித்திரம் ஏறுகிறது; பம்பாயின் ஓரத்திலே—உலகின் ஏனைய பகுதிகளிலே காலமாறுபாட்டை இன்னமும் உணராது ஏகாதிபத்தியக் கோலத்தோடு வாழ்ந்திடும் ஏமாற்றுக்காரர்களுக்கு சரியான தோர் பாடமும் கற்பிக்கிறது.

சிமிழ்க்காத விழியினரால் — அன்னியரை விரட்டினால் அல்லாறி உறங்கோம் என்ற உரம் வாய்ந்த உளத்தினராய்-- நாட்டை விடுவிக்கும் நல்ல பணியொன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு தாயகம் சேர்ந்த பிரெஞ்சுத் தமிழர்கள் நம் பாராட்டுக்குரியவர்கள்; ஆளவந்தவர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு அஞ்சாது போர்ப் பாட்டின் முதலடியை முணகும் போதே அவர்கள் அடைந்த வெற்றி மகத்தானது; மாற்றாரும் கண்டு அஞ்சக்கூடியது!

இந்த மாபெரும் வெற்றிக்காக நடந்த விடுதலைப் போரிலே தொண்டர்களைச் சிறைக்கனுப்பி நாம் பெற்ற பங்கை நினைத்து மகிழும் நேரத்தில்—அன்னிய திட்டுகளின் பெரும் பகுதி மறைந்தமைக்காக இந்திய உபகண்டம் முழுவதும் உற்சாகக் கடலாடிக் கொண்டிருக்கும் வேளையில் சோகச் செய்தியொன்று நம் சிந்தை நோகச் செய்கிறது.

மந்தையிலே புகுந்து ஆடுகளை அழிக்கும் சிறுநரியை மாய்க்க வலுவில்லாதவர்கள் அதை அடித்து விரட்டுவோர்களேயன்றி, அதுவும் செய்யாமல் அருகழைத்து உனக்கு ஆடுவேண்டாம்; கோழி தருகிறேன் என்று கூறமாட்டார்கள்.

ஆனாலும் இந்திய நாட்டு ஆயர்கள் அப்படித்தான் செய்கிறார்கள்- ஆண்டாண்டு காலமாக அடிமையாக்கி வைத்திருந்து — இப்போது அரசுகட்டில் துறக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கு மூன்றுகோடி ரூபாய்களை நஷ்டஈடாக இந்திய அரசாங்கம் தரப்போகிறதாம்.

நமக்கே உரிய பூமி; அதைத் திரும்பவும் நம்மிடம் ஒப்புவித்து ஓடுவபர்களுக்கு நஷ்டஈடு தரப்போகிறார்களாம் !

விநோத வியாக்யானம்'! ஆசியாவைவிட்டு அன்னியர்களை வெளியேற்ற வில்லிலே நாண்ஏற்றிப் புறப்பட்டிருக்கும் பண்டிதர் ஆட்சியில் தான் தரப்படுகிறது.

அவ்வாறு கொடுக்கப்படும் நஷ்டஈடும் ஒன்றோ, நூறோ அல்ல; மூன்றுகோடி ரூபாய்கள் ! அன்னியராம் அவர்தம் ஆக்ரமிப்பால் வாழ்வழிந்து போனதற்கு நாம் அவர்களிட மிருந்து நஷ்டஈடு கேட்க வேண்டியிருக்க, அவர்களுக்கு நம் அரசாங்கம் தருகிறது—மூன்று கோடி ரூபாய் நஷ்டஈடு !

தான் பிடித்த மண்ணுக்கு இந்திய அரசினர் அளித்திருக்கும் மதீப்பீட்டை எண்ணும்போது சிதையிலே தூங்கும் டூப்ளேயின் சவம்கூட வெற்றிச் சிரிப்பு சிந்தும் !

மூன்றுகோடி ரூபாய்—பிரெஞ்சிந்தியத் திட்டுகளின் விடுதலைக்குத் தரப்படும் விலை என்பது தெரிந்திருந்தால், தலைகள் அறுப்பட்டு வீழ்ந்த போதும்கூட அந்தப் பிராந்தியத்து மக்கள் சுதந்தரப் போரை இவ்வளவு விரைவில் நிறுத்தியிருக்க மாட்டார்கள்.

அது மட்டுமல்ல; வெள்ளையனுக்குக் கொடுக்காத நஷ்டஈட்டை இந்தப் பிரெஞ்சுக்காரக் கொள்ளையனுக்கு ஏன் நாம் தரவேண்டும் ? —என்று வெடித்துவரும் வினா இருக்கிறதே, அது ஜொலித்து நிற்கும் நம்முடைய சுதந்தர வரலாற்றில் படிந்து நிற்கும் களங்கம் ! அந்தக் களங்கம் கழுவப்படவேண்டும்.

செப்புக் காசுகளை விலையாகக் கொட்டிக் கொடுத்த பின்புதான் காரை—புதுவை மக்களுக்கு சுதந்தரம் கிடைக்கு மென்றால் அந்த சுதந்தரம் அவர்களுக்கு வேண்டவே வேண்டாம் என்று கூட சொல்லத் தோன்றுகிறது—விற்றுவிட்ட நிலத்தை மீண்டும் விலை கொடுத்து வாங்கும் போக்கைத்தான் இந்த 'விடுதலை' நினைவு படுத்துகிறது, என்று நாம் கூறாமலிருக்க முடியவில்லை.

# "நேரு போலத் தலைவர் ஏது?"

## நெருப்புக்கோழிப் பண்பால் வந்தவினை!

## குடந்தையில்-கருணாநிதி

இளைஞர் தமிழ் மன்றத்தின் ஆண்டுவிழா 17-10-54 மாலை 5-30 மணிக்கு இசைமுரசு நாகூர் அனிபா அவர்களின் இன்னிசை விருந்துடன் தோழர் இளம்வழுதி எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் துவங்கியது. இலட்சிய நடிகர்கள் எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. கே. நீலமேகம், திருச்சி பராங்குசம் ஆகியோர் பேசிய பின் தோழர் மு. கருணாநிதி நீண்ட உரை நிகழ்த்தினார். திராவிட கழகத் தோழர்கள் அச்சியற்றித்தந்த 22 கேள்விகட்கும் தக்க பதிலளித்தார்.

நாம் இங்கு கூடியிருக்கிறோம். இந்த நாவலர் தீவின் பிரதமர் நேரு துரைமகனார் செஞ்சீனத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கிறார். சுந்தர புரியாம் சீனத்துப் பிரதமர் சூ—என்-லாய் வந்து போனார் இங்கே! சுரண்டல் புரியின் மூலவர் அங்கு போகிறார். சோபிதமான செய்தியென மகிழ்வர் தேசியத் தோழர்கள். விமான நிலயத்திலே ஆயிரமாயிரம் பேர் வரவேற்றனர்-மோதிலால் திருமகனாரின் முகாரவிந்தங் காண சீனத்துப் பெருமக்கள் முந்திக்கொண்டு ஓடினர் - மாலையால் மறைந்தார் மகாத்மாவின் வாரிசு - என்றெல்லாம் பேசுவர் - சீனத்துத் தலைவர்களுடன் கைகுலுக்கிய காட்சிகள் - பார்வையிட்ட இடங்கள் - விருந்து ஏற்ற மாளிகைகள் — அத்தனையும் ஏடுகள் நிறைய படங்களாக வெளிவரும் - கதர்க்கொடிக்காரர்களுக்கு களிப்பூட்டும் சேதிதான் - மறக்கவில்லை. ஆனால் மகிழும் நேரத்திலே மறந்துவிடக் கூடாதது ஒன்றுண்டு - சீனம் செல்லும் நேரு என்னென்ன காண்பார் - இந்தியா வந்த சூ என் லாய் எவையெவை கண்டார்? இந்தக் கேள்விக்கு அவர்கள் இருவருமே பதில் தராவிட்டாலும், நாம் சிந்தித்துத் தீரவேண்டிய கேள்வியும் பதிலுமாகும் இது!

செழித்து வளர்ந்த சமுதாயம் -
சீர்த்திருத்தம் பெற்ற மக்கள்
பெருவெள்ளம்— சிந்திக்கும்
ஆற்றல் பெற்ற சேயிழை
யார்—அவர்கள் பெற்
[illegible] செல்வங்கள் — அறிவாலயம்—அன்பு
வளர் கூடம்,

- அத்தனையும் அங்கு நேரு காண்பார். ஆனால் இங்கு வந்த சூ, என்ன கண்டார்? புது டெல்லியிலே மட்டும் தங்க வைத்து அவரை அனுப்பியிருந்தாலுங்கூட - அவர் காண வேண்டுமென்று விரும்பி கண்டிருக்க நேர்ந்தால்,

சோமநாதர் ஆலயத்து ஜீரணோத்தாரணமும், சொர்க்கம் போவதற்கு அமைக்கப்பட்ட கும்பமேளாத்திருநாள் மண்டபமும், திருப்பதி வைர முடியும், தில்லை தங்க வீடும், கண்டிருப்பார் — திரவியம் தேங்கிக் கிடக்கும் இடங்கள் இவையெனப் புரிந்திருப்பார்! தெருவிலே விழுகின்ற பிணமும், பிள்ளை விற்கும் பாட்டும். அவர் கண்ணுக்கும் காதுக்கும் எட்டாமல் போயிருக்கலாம்; 'இரும்புத் திரை' விழுந்திருக்கலாம், ஆனால் நாம்

மறந்துவிட முடியாது — வெட்கமும் வேதனையும் உள்ளத்தைக் குடைகிறது ஒரு புறத்திலே; விருந்துவைத்து அழைக்கிறோம் வெளிநாட்டுப் பெரியவர்களை! சுதந்திரம் பெற்றதாக பறையொலிக்கப் படும் இந்த ஏழெட்டு ஆண்டு காலத்திலே "இந்தியாவின் கீர்த்தி பார்!" என்று கித்தாப்பு பேசிக்கொண்டு வெளி நாடுகளில் வெளிச்சம் போட முடிகிறதே தவிர, நாடு வாழ — நாட்டு மக்கள் நலிவு தீர - இந்த 'நல்லவர்கள்' செய்த காரியமென்ன? பிறகேன்; நாட்டாண்மை இவர்கள் கையில்? கேட்க மாட்டோமா? கேட்பது தவறு? இப்படிப் பிறந்த ஆயிரமாயிரம் கேள்விகள்தான் இன்று அலகாபாத் வீரரை அதிர்ச்சி ஆயுதத்தைக் கையிலேந்தச் செய்திருக்கிறது. அலுப்பு அதிகமாகி விட்டது; ஆகவே சற்று விலகியிருக்கிறேன் எனக் கூறுகிறார் நேரு!

'விலகி யிருக்கிறேன்' என்கிற வேட்டு எல்லா நாட்டிலும் எல்லாத் தலைவர்களுமே கிளப்புகிற வழக்கமான வேட்டுத்தான்!

நெருக்கடி மிகுந்துவிடுகிற நேரத்திலே இந்த மருந்தைத்தான் அதிகாரத்திலிருப்போரும், தலைமை பீடத்தில் இருப்[illegible]ரும் கையாளும் [illegible]க்கம். கட்சி கல கலத்துவிட்டால் - கட்சித் தலைவர் இந்த அதிர்ச்சியை உண்டாக்குவார்! நாட்டிலே பிளவு ஏராளமாகப் பெருகி விட்டால் அதிகாரத்திலிருப்போர் இந்த அதிர் வெடியைப் போடுவர். நேருவும் அதே முறையைத்தான் இன்று கையாளுகிறார்-இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது நெருக்கடியினிடையே நேரு சிக்கியிருக்கிறார் என்ற உண்மையைத்தான். ஐந்தாண்டுத் திட்டங்கள்-அணைக்கட்டுத்திட்டங்கள்என்றெல்லாம் போடப்பட்ட திட்டங்கள் அரசாங்கத்தின் நஷ்டக் கணக்கையும், அபரிமிதமான புத்திசாலித்தனத்தை அன்னியருங் கண்டு நகைக்கத்தக்க நிலைமையையும் உண்டாக்கத்தான் பயன்பட்டதே தவிர, உருப்படியாக எதுவும் நடைபெறவில்லை. திட்டங்களுக்காக வாங்கப்பட்ட ஏர்க்கலப்பை யந்திரங்களிலே கூட ஏராளமான நஷ்டத்தைத் தான் இந்த அரசாங்கம் பெற்றது. அலுவலர்கள் பெரும்பாலோர் வாழ்க்கை நடத்த சக்தியற்று அதிருப்தியுற்றுத் தேய்ந்து போன வண்ணமிருக்கிறார்கள். உற்சாகம் ஓய்ந்த பின்னர் உழைப்பேது? உழைப்பின்றி தழைத்திட்ட தேசம் தான் எங்குளது? இந்த உபகண்டத்தின் மூலைக்கு மூலை கிளர்ச்சிகள்! மொழிவழி மாகாணம் பிரியவேண்டுமென்ற ஆசை காட்டி, மக்களின் ஆதரவு பெற்றனர் காங்கிரசார்-மக்கள் அதை மறந்திருப்பர் என எண்ணி, இன்று மொழிவழி மாகாணப் பிரிவினைக்கு நேரு முட்டுக்கட்டை போடுகிறார்—அந்தத் தடையை உடைத்தெறியும் படை பல முனைகளில் தோன்றி விட்டது-பட்டம் தாளுக்களைக் கொண்டு சுட்டுப் பொசுக்கினாலும் சுழன்றெழும் அந்தக் கிளர்ச்சித் தீயை அடியோடு அணைத்துவிட இயலவில்லை. கார்த்திகைப்பையில் அடங்கியிருக்கும்நெருப்புபோல அது புகைந்து கொண்டே யிருக்கிறது! ஆர்ப்பாட்டம் - அதிகாரம்- அடக்குமுறை- ஆணவப் பேச்சு எதையுமேலட்சியம் செய்யாத ஆந்திர சகோதரர்கள் பொட்டி சீராமுலுவின் சமாதியின் மீது ஆந்திர அரசு அமைப்புப் படத்தை நேருவைக் கொண்டே திறந்துவைக்கச்சொல்லி விட்டார்கள்-அது, நேருவைப் பொறுத்தவரை, அவர நெஞ்சை விட்டகலாத பெரும் தோல்வி! இலங்கை வாழ் மக்களின் பிரச்சினைக்கு இன்னும் முடிவான நிலைமை—காணமுடியவில்லை. அவர்கள் அல்லல் தீர்ந்தபாடில்லை! தென்னகம் தனித்து வாழ விரும்பி, அதற்கான விடுதலைப் போர்க் கொடியை உயர்த்திவிட்டது! இந்தியை தேசிய மொழியாக ஏற்பதற்கு தென்தேசம் தயாராக இல்லை! இதுவும் அவரது கருத்தை மிகவாகக் கலக்கும் செய்திதான்! வடநாட்டார் ஆதிக்கத்திலிருந்து நமது தாயகம் விடுபட வேண்டுமென்றதாகம், நமக்குமட்டுமல்ல காங்கிரஸ் பாசறையிலிருக்கும் திராவிட நண்பர் பலருக்கும் ஏற்பட்டுவிட்டது! இது நேரு சர்க்காரின் சிரஞ்சீவித் தன்மையின் தலையிலே விழும் இன்னொரு இடி! இப்படி அங்கிங்கெனாதபடி எங்குமே, நீக்கமற நிறைந்து விட்ட நெருக்கடிதான், நேரு துரைமகனாரை — நெற்றியை சுருக்க வைத்திருக்கிறது — விலகிக் கொள்கிறேன் என்கிறார். முன்பெல்லாம் காங்கிரஸ் காரர்கள் கூவினார்கள், "நேருவைப் போல வேறு தலைவர் எங்கேயிருக்கிறார்?" என்று. இந்தக் கேள்வியை ஆர்வத்தோடு உரத்த குரலில் கேட்டால் அது நேருவுக்குப் பெருமை தரக்கூடியது — நேருவைத்தவிர வேறு யாருமில்லை என்று முழக்கமிட்டனர் — நெருப்புக் கோழியின் செயலப்பா இது என்று நாம் கண்டித்தோம்! நெருப்புக்கோழி பொந்துக்குள் தலையைமட்டும் நுழைத்துக் கொண்டு உடல் முழுதும் மறைந்து விட்டதாக எண்ணிக் கொள்ளுமாம் —அது போலத்தான், நேருவை மட்டும் நீங்கள் காண்கிறீர்கள்; அவர் போன்ற பெருந்தலைவர்கள் அவரினும் மேம்பட்டோர் — காங்கிரசில் இல்லையெனினும் வேறு இயக்கங்களில் உளர் என நாம் கூறினோம். கேலி பேசினர்; நேருவைத் தவிர வேறு யாருமில்லையென மலையேறிக் கூவினர் — ஆவேசமாகக் கூறும் போது அந்த வாசகம் அழகாய்த் தானிருந்தது!



அதே வாசகத்தை, குறைந்த சுருதியில். "நேருவைப் போல் யார் இருக்கிறார்கள்?" என்று ஆயாசத்தோடு கூறினால், வாசகத்தில் அழகில்லாதது மட்டுமல்ல; காங்கிரஸ் காரர்கள் முகத்தில் அசடு மல்லவா வழிகிறது?

(10-ம் பக்கம்)

# ராஜா வெற்றி - விடுதலை விளம்பரம்! தருமு வெற்றி - மகத்தான பாடம்!

எங்கு நோக்கினும் மூவர்ணக் கொடி, எவரைப்பார்ப்பினும் கதருடை, எங்கும் காங்கிரசாட்சியின் செல்வாக்கு—என்று இருந்த நேரத்தில் துணிந்து தனிக்குரலாக்கி கிளம்பிய ஏடு விடுதலை! அதைத் தீண்டுவது தேசத் துரோகம் என்று ஏசினர். விடுதலை விற்பனையாளர்கள் தாக்கப்பட்டனர். எனினும் நெஞ்சு உரத்துடன், காங்கிரசைக் கண்டித்து எழுதிய ஏடு விடுதலை. திராவிடரின் விடுதலை முரசாக-இதயநாதமாக விளங்க வேண்டுமென்பதற்காக, அந்த ஏடு தளிர் நடைபோட்ட போது ஆதரவு ஊட்டிய அன்பர்கள் பலர். அப்படிபட்ட விடுதலையில், மாட்டுப் பெட்டிக்கு ஓட்டுப் போடுங்கள் என்ற விளம்பரம் வெளிவரச்செய்தார் ராஜா சிதம்பரம் என்றால், உண்மையிலேயே பெரிய வெற்றிதான்! நமக்கெல்லாம் தலை இறக்கம்! அவரோ, மார்பை நிமிர்த்தி நடந்தார். விடுதலையைக் கண்டீர்களா, என் தேர்தல் அறிக்கையைப் படித்தீர்களா என்று கேட்டார். உன் கண்ணைக் குத்திய கத்தி இதுதான், தடவிப் பார் இதன் கூர்மையை என்று ராஜா கூறினார். பெரியாரின் பெருந் தொண்டர்கள், என்னென்ன எண்ணினார்களோ நானறியேன் · இருந்துவிட்டு வந்தவன் என்ற முறையில் நான் கலங்கினேன்.

ராஜாசிதம்பரம் வெளியிட்ட தேர்தல் விளம்பரமும், மிகச் சாமர்த்தியமாகத் தயாரிக்கப்பட்டது. அதைப் படிப்போருக்கு, பெரியாரின் ஆலோசனையின் படியும், அனுமதியின் பேரிலும், ஆதரவுடனும், ராஜா சிதம்பரம் காங்கிரஸ் அபேட்சகராக நிற்கிறார் என்று தோன்றும். பெரியாரால் பாராட்டப் பட்ட ஆருடம் ஆறுமுகப் பிள்ளையிடம் ஐந்து கேள்விக்கு ஒரு ரூபாய் அனுப்பி விடைபெற்றுக் கொள்ளலாம் என்று ஓர் விளம்பரம் விடுதலை வெளியிட்டால், என்ன எண்ணுவோம். ராஜா சிதம்பரம் இதையும் மிஞ்சும் படியான செயலை மிகமிகச் சாமர்த்தியமாகச் செய்து விட்டார். அவர் வெற்றி அது. ஆனால் மக்கள் தந்த தீர்ப்போ, வேறு! அது மகத்தானதோர் பாடம்!!

இந்தச் சிறிய வெற்றியைக் கண்டு தாவிக்குதிக்காதே! இது சகஜம்; ஏழெட்டு இடங்களில், எப்படியோ சிலதுகள் தப்பிப் பிழைப்பதுண்டு என்று ஏளனம் பேசி, மன எரிச்சலுக்குச் சாந்தி தேடிடும் சிலர், உளர். இந்த வெற்றிக்கு நான் மகிழ்வதற்குக் காரணம்? அபாரமான அரசியல் தெளிவும், ஆருட வல்லமையும் இருப்பது போல எண்ணிக்கொண்டு, ஒரு அவசர சாமி 'விடுதலை'யில், "ஜில்லா போர்டு தேர்தலில் ஒரு நல்ல பணவேட்டையும் பதவிவேட்டையும் ஆடிப் பார்த்துவிடலாம் என்று மனக் கோட்டை கட்டினார்களே, கழகத்தைப் பிளந்து பாழாக்கிய கோடாரிக் காம்புக் கூட்டத்தார், இன்று அந்த மனக் கோட்டை என்னவாயிற்று? மறைமுகமான (முக்காடிட்டு) ஓட்டு லேபில்களில் தலைநீட்டுகின்ற 7, 8 டோர்வழிகள்கூட மண்ணைக் கவ்வப் போகிறார்கள்" என்று 23—9—54ல் தீட்டினார். இந்த ஆருடத்துக்குப் பிறகு,—ஆருடமோ, சாபமோ நானறியேன்!—நமது தோழர்கள் வாகை சூடினர் என்றால் மகிழாமலிருக்க முடியுமா! ஏதேதோ எண்ணத்தான் தோன்றுகிறது. ஆனால் ஊசல் நடையில் ஏசி உயிரை வாங்கி விடுகிறேன். மாதம் அதற்காக மூன்று நூறாவது தந்தால் போதும் என்று கூறிப்பெற்று, மகத்தான 'தியாகம்' செய்து வரும் மாவீரர் "ஏழெட்டுச் சிறுவர்களா! உங்களுக்கு இத்தனை எண்ணங்களா" என்றுகேட்பார்

நமது எண்ணம் திராவிடத்துக்குப் பணியாற்றும் வாய்ப்பு நமக்கு அளிக்கப்படவேண்டும் என்பதுதான். அதை அளிக்கும் பொதுமக்கள் மாவட்ட ஆட்சி மன்றத்தில் பணிபுரியவும் நம்மில் சிலருக்கு வாய்ப்பளித்துள்ளனர். அது கண்டே அகமகிழ்கிறோம். ஆதரவு அளித்த மக்களுக்கு நன்றி கூறிக்கொண்டு, வெற்றிபெற்ற தோழர்களை வாழ்த்துகிறேன், வணக்கம்.

அண்ணா

# மனித சக்தியை மதிக்கும் 'மகானுபாவர்'கள்!

கொடை வள்ளலின் பெருமை பற்றிப் பேசுபவன் ஈகை குணமுடையவனாக இருக்கவேண்டும்; அப்போதுதான் அன்னவரின் பேச்சுக்குமதிப்பிருக்கும். வீரத்தின் மாண்பு பற்றி பறை சாற்றுகிறவன் களம்பல கண்டவனாக இருந்தால் மக்கள் ஏற்பர் அவன் கூறும் கருத்துக்களை! ஆனால் சொல்லுக்கும் செயலுக்கும் மாறுபட்டவன் பேச்சை மக்கள் மதியார் — அவன் சொல்லுக்கு செவி சாய்க்க மாட்டார்கள்.

தாஜ்மஹாலை எழுப்பியது மனித சக்திதான்-மறுப்பாரில்லை. திருமலை நாயக்கன் மஹால் மனிதனின் சக்தியால் உருவாக்கப்பட்டதுதான் — ஒப்புகிறோம். இன்னும் சொன்னால், பூமாலை சூடப் பெற்று பாமாலை, பதிகம்-இவைகளைவேண்டற்பாக்களாகப் பெறும் பரமனின்(!) சிலைகளைக் கூட மனிதன் தான் செதுக்குகிறான்—ஆனால், "அந்த மனித சக்தி இப்போது மதிக்கப்படவில்லை, வியர்வை ஏளனம் செய்யப்படுகிறது; அதுபோது இராமாயணம்வேண்டுமா, அதைஎரிக்கலாமா, கூடாதா என்பது பற்றி ஆராய்வதற்கு இது தானா தருணம்?" என்று பொருள் பட ஒரு பொது வுடமைக்கட்சிப் பிரமுகர்—இல்லை—தலைவர் ஒருவர் சென்ற வாரம் சென்னையில் முழங்கி (!) இருக்கிறார். அவருடைய உபசார வார்த்தைகளுக்கு நன்றிசெலுத்துகிறோம். அதே நேரத்திலே மனித சக்தியை இகழும் நிலையை மக்கள் மத்தியிலே 'சிரஞ்சீவி'யாக வாழச் செய்வது எது என்பதுபற்றி அந்தப் பெருந்தலைவர் (!) சொல்லக் காணோம்! ஏன் அந்த இருட்டடிப்பு! இராமாயண எதிர்ப்புக் கூடாதாம் — அது அல்லவாம் இப்போது முக்கியம்! இராமாயணத்தை ஏன் எதிர்க்கிறோம்—ஏன் அதை எரிக்க வேண்டுகிறோம் என்பதை அந்த 'அகில உலகக் கண்ணோட்டக்காரர்' உணரவில்லை!

உதாரணமாக, பத்து நாட்களாக கூலி கிடைக்காத ரிக்ஷாக்காரன், பதினோராவது நாள் ஏதாவது பணம் கிடைத்தால், சென்ற பத்து நாட்கள் கூலி கிடைக்காதது ஆண்டவனை நினைக்காத குற்றம் தான், எனவே இன்று கிடைத்த பணத்திற்கு ஆண்டவனுக்கு தீபாராதனைகாட்டத்தான் வேண்டும் என்ற நிலைதானே உழைப்பாளர்கள் மத்தியிலே நிலவி வருகிறது! மனித சக்தியாம்! வியர்வைக்குளமாம்! முகஸ்துதி பாடுகிறார், விசாலப் பார்வைக்காரர்! ஏன் அந்த நிலை? யார் உருவாக்கியது அந்தத் தாழ்வு மனப்பான்மையை! கம்பராமாயணங்கள்தான் என்று நாங்கள் சொல்லுகிறோம். அதுவல்ல் காரணம் என்பவர், ராமாயணத்தை எரிப்பதற்காக வரா விட்டாலும், ராமாயண கதாகாலட்சேபமாவது செய்யாதிருக்கலாமல்லவா! மனித சக்தியைப் பற்றிப் பேசித்திரியும் அந்தப் பெருமதிப் (!) பிற்குறியவர்கள், ஏன் மனித சக்தியை இகழும் இதிகாசங்களை எதிர்க்கும் பணிக்கு எதிர் பிரச்சாரம்செய்ய வேண்டும்? ஆதரவு காட்டா விட்டாலும்; ஏன் அந்த வரட்டு இதிகாசங்களுக்கு வாழ்வு தரத் துடிக்க வேண்டும்? இதுதான் மனித சக்தியை மதிப்பதின் அழகோ?

# கண்ணீர் வடிப்பா? கண் துடைப்பா?

"ஆடம்பரம் மிகுந்த, அரண்மனையை போன்ற 'ராஷ்டிரபதி பவன்'த்தில் என்றால் மகிழ்ச்சியுடன் வாழமுடியவில்லை" — ராஷ்டிரபதி ராஜன் பாபுதான் இவ்வாறு சென்றகிழமை திருவாய் மலர்ந்தருளியுள்ளார். நாங்கள் அரசு கட்டிலேறினால் ஐந்தடுக்கு மாளிகையை விரும்போம்; ஐநூறு ரூபாய்தான் ஊதியம் பெறுவோம் என்று வாய்ப்பறை சாற்றிய வீரர்களின் பிரதிநிதிதான் இப்போது உப்பரிகை வாழ்வு பிடிக்கவில்லை யென்று கண்ணீர் வடிக்கிறார். குடிசை வாழ்க்கையின் இன்பத்தை அந்த கோலாகலபுரியில் துய்க்க முடியவில்லையேஎன்று துயரகீதம்பாடுகிறார்!

பாவம்—எப்படி அவர் மனச் சாந்தியுடன் ஆனந்தபவனத்தில் உலவமுடியும்? வார்தா ஆஸ்ரமவாசி அவரது கனவிலும் நனவிலும் தோன்றி தன் புறுத்துகிறாரோ என்னவோ — சுத்த மனச்சான்றை ராஜேந்திரர் மறைக்காமல் வெளியிட்டிருக்கிறார்.

குடியரசுத் தலைவருக்கு குபேர வாழ்க்கை உண்மையிலேயே பிடிக்காமலிருந்தால் ஏன் அவர் சென்ற திங்கள் தன்னுடைய சொந்த சவாரிக்காக மெருகு கலையாத ஜெர்மன் காருக்கு ஆர்டர் கொடுத்திருக்க வேண்டும்? துறைமுகத்தில் வந்து இறங்கியவுடன் அதன் மீது தூசி படியாமலிக்க ஏன் ஏராளமான போலிசாரை காவல் வைத்திருக்க வேண்டும்? எளிய வாழ்க்கையின் மேன்மையைப் பற்றி விளக்கவுரை ஆற்றும் காந்தி சீடர் ஏன் சுதேசிக்கார் ஒன்றை தேர்ந்தெடுக்கக்கூடாது? —இப்படியெல்லாம் தட்டிக் கேட்க அந்ததொண்டுகிழவர் காந்தியார் இல்லை. அவரை ராஜகட்டத்தில் தூங்கவைத்து விட்டுத்தான் ராஜேந்திரர்கள் இப்போது கண்துடைப்பு வேலை நடத்துகிறார்கள்.

## ஐயப்பன் ஓடினுன்!

**10**




பரிமளா, தன் காதலனின் பெயரை சொல்லிவிடப் போகிறுள் என்ற மகிழ்ச்சியில் அம்பலம் ஆவலாக நின்று கொண்டிருந்தார்; என்ருலும் அவரது கண்கள் சாளரத்தின் வழியாகசமுத்திரத்தைநோக்கத் தவறவில்லை. தோணிகள் மிக வேகமாக வந்து கொண்டிருந்தன. அம்பலம் துடித்தார்- 'சொல்லிவிடு ! சொல்லிவிடு !' என்று உரக்கக் கத்தினுர்.

"சத்தியமாக அவருக்கு ஒரு ஆபத்தும் வராது என்று சொல்லுங்கள்" இது பரிமளம்.

"சமுத்திர ராஜன் ஆணையாச் சொல்றேன்—ஒரு ஆபத்தும் வராது—அட சனியனே; சீக்கிரம் சொல்லித் தொலையேன் ...?"

"சொல்லுகிறேன் — ஹே ! சமுத்திர ராஜா ! உன் மீது சத்தியம் செய்திருக்கிருர் இந்தப் பெரிய மனிதர்—இவர் ஆணையை மீறினுல். என் காதலருக்கு ஏதாவது ஆபத்து வந்தால்—பிறகு உன்னைத்தான் கேட்பேன்."

"அட சீக்கிரம் சொல்லு !"

"அவசரப்படாதீர்கள்- அவர் பெயர் !"

"ம் — அவர் பெயர் ?— என்ன ... ?"

"அவர்.........அட......அய்யய்யோ...மறந்து விட்டேனே; ஆமாம் கணவன் பெயரைச் சொல்லலாமா ?"

"அட ஆபத்துக்குப் பாபமில்லை !"

"இப்போது எனக்கு என்ன ஆபத்து வந்து விட்டது ?" சோகத்திலும் அவள் கிண்டல் செய்யத் தவறவில்லை.

"உனக்கு ஒன்றும் ஆபத்து இல்லை-எனக்குத்தான் ஆபத்து வருது !" என்று கூறியபடி சாளரத்தின் வழியாக கடலைப் பார்த்தார். தோணிகள் இன்னும் சில நிமிடங்களில் கரையை அடைந்து விடும் எனக் கண்டார். பரிமளாவிடம் திரும்பி 'சொல்லும்மா சீக்கிரம்! கல்யாணம் ஆகாததற்குமுன்பு சொன்ருல் பாபமேயில்லை'

"ஒகோ, அப்படியொரு விதிவிலக்கு இருக்கா—அப்படியாருல் என் காதல் துரையின் பெயரை சொல்லித்தான் தீர வேண்டுமா ?"

"ஆமாம்-ஆமாம்-ஆமாம்-" என்று தன் தலையிலேயே அடித்துக் கொண்டார் அம்பலம். பரிமளாவுக்கு சோகத்தினிடையேயும் சிரிப்பை உண்டாக்கியது அந்த நிகழ்ச்சி.

"சொல்லப் போகிருயா ? இல்லை சாகிருயா ?" என்று சீறிக் கிளம்பினுர் அவர்.

"சொல்லுகிறேன்—கோபிக்காதீர்கள். அவர் ... அவர்... அவர் பெயர்...முதலெழுத்து- ... "து !"...

"உம்- அடுத்த எழுத்து... ?'

"அவர் பெயர்...து...து.... து...து..."

"துப்பினது போதும் — சொல்லு !"

"துக்காராம் அவர் பெயர்!!'

"துக்காராம்—ஜே ஜே விட்டல் !"

அம்பலத்திற்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

"சரி ! — அவன் விலாசம் என்ன ?"

"விலாசமா ? துக்காராம்—சைக்கிள் கம்பெனி—சக்கரவர்த்தி தெரு — பட்டுக் கோட்டை. இதுதான் அவர் விலாசம்"

அம்பலம் அந்த விலாசத்தை தனக்குள்ளாகவே இரண்டு மூன்று தடவைகள் முணகிக் கொண்டார், மறந்து விடாமல் இருப்பதற்காக !

"சரி—பரிமளா ! — இனி மேல் உனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை — நீ நல்ல பெண்ணு...நான் சொல்றதைக் கேளு ! உனக்கு உயிருக்கு ஆபத்து வராம இருக்கணும் என்ருல், கொஞ்ச நாளைக்கு என் வீட்டிலாவது வந்து தங்கியிரு—உண்மையாச் சொல்றேன்; உங்கப்பன் கத்தியை தீட்டி வச்சுகிட்டு தயாராயிருக்கிருன், உன் தலையை வெட்ட ! ஆமாம்-ஜாக்ரதை!"

"முடியாது ! நான் எங்கும் வரவில்லை"

"முட்டாள் — பிடிவாதம் பிடிக்காதே ! உன் காதலனையே அங்கு அழைச்சு கிட்டு வர்ரேன்—"

"வேண்டாம்; என்னை விட்டு விடுங்கள் !"

"சொல்வதைக் கேளு — வீணு சாகாதே !"

அம்பலத்தின் பேச்சினிடையே அவரது ஆட்கள் தட தட வென்று மேலே ஓடிவந்தார்கள். "என்ன என்ன" வென்று அவர் பதறினுர்.

"தோணியில் வருகிறவர்கள் போலீசார்" என்ற செய்தியைச் சொல்லி அவர்களு நடுங்கினுர்கள்,


"ஆ—போலீசாரா ?"

"ஆமாம்—எங்களைக் கூடப் பார்த்து விட்டார்கள்-"

"அய்யோ—நீங்க, மேலெ ஏறிவந்ததையும் பாத்திருப்பாங்களா !"

"பாத்திருப்பாங்க ! கண்டிப்பா பாத்திருப்பாங்க !"

"சரி-சரி-வாங்க-ஓடி விடலாம் !" எனக் கூறியபடி சாளரத்தின் வழியே அம்பலம் பார்த்துக் கொண்டார்-தோணிகள் கரையோரத்திலே மெதுவாக அசைந்து கொண்டிருந்தன. ஒரு தோணிக்கும் மறு தோணிக்கும் இடையே சிறிது தூரம் இருந்தாலும் கூட இரண்டும் ஏக காலத்தில் கரை சேர்ந்துவிட்டன. அம்பலமும் ஆட்களும் கீழிறங்கி ஓடுவதற்குத் தயாரானுர்கள். பரிமளாவையும் தங்களுடன் ஓடிவரும்படி அம்பலம் அவசரப் படுத்தினுர். அவளும் அவர்களுடன் ஓடுவதற்குத் தயாராருள். கீழிறங்கி விட்டார்கள் வேகமாக — மிகவும் களைத்துப் போயிருந்த பரிமளாவினுல் வேகமாக ஓட முடியவில்லை—அந்தச் சமயத்தில் திடீர் என்ற துப்பாக்கி சப்தமும் கேட்டது — அம்பலமும் மற்றவர்களும் வேகமாக ஓடி, மர மடர்ந்த பகுதிகளின் பின்னே மறைந்து செல்ல ஆரம்பித்தனர். துப்பாக்கி ஒலியால் அதிர்ச்சி அடைந்த பரிமளம், ஒரு கல்லில் கால் இடரவே, அலறிக்கொண்டு கீழே வீழ்ந்தாள். அவளால் எழுந்து நிற்க முடியவில்லை. அதற்குள் அம்பலம் கூட்டத்தார் வெகு தூரம் போய் விட்டார்கள் — கரையில் இறங்கிய 'போலீசார்' பரிமளம் விழுந்து கிடக்கும் இடம் நோக்கி ஓடிவந்தார்கள், கீழே கிடப்பது யார் என்று துரைக்குத் தெரிந்து விட்டது —"பரிமளா!" என்று கத்தி விட்டான். அவளோ திகைத்துப் போருள். திசைகாண முடியாத இருட்டுப் பாதையில் அதுவும் அமாவாசை தினத்தன்று திடீரென நிலவு தோன்றி வெளிச்சம் தர முன் வந்தால் கூட அவள் ஆச்சரியப் பட்டிருக்க மாட்டாள்; இப்



போது ஆச்சரியத்திலேயே மூழ்கி விட்டாள்; அவளால் பேச முடியவில்லை. துரையை அணைத்துக் கொண்டு, பொங்கி வரும் கண்ணீரை அவன் கன்னத்திலே பொழிந்து விட வேண்டுமென்று துடித்தாள், பக்கத்திலே மற்றவர்கள் இருக்கிறார்கள் — ஆகையால் அசைவற்றுப் போனாள். துரை, தன் தோழர்களைக் கூப்பிட்டு, நீங்கள் தோணிக்குப் போய், அந்தக் கிழவரை தூக்கிச் சென்று, மனோராவுக்குள் வையுங்கள்!" என்றான். அவர்கள் தலையசைத்தபடியே, "ஆமாம்—அந்த ஐயப்பன் கோஷ்டியை என்ன செய்வது?" என்றனர்.

"அவர்களை மிரட்டி வெகு தூரத்திற்கு துரத்தி பதில் கூறி விட்டு, பரிமளாவின் பக்கம் திரும்பினான். அவனது அவசரத்தையும், அவன் போட்ட திட்டங்கள் அனைத்தும் பரிமளாவைக் கண்டதும் மாறிவிட்டதையும் நினைத்துக் கொண்டு அவனது தோழர்கள் மனதிற்குள் சிரித்தவாறு அதைவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் போனதுதான் தாமதம், பரிமளாவும் துரையும் அந்த வெள்ளிமணல் படுக்கையிலே தழுவிக் கொண்டு சிலவினாடிகள் அசைவற்றுப் போயினர்.

"நீ மாத்திரம் கோபிக்காமலிருந்தால், உன் கன்னங்களை என் விரல்களால் தடவிக் கொண்டே உலகத்தை மறந்து, உயிர் போமளவும் இருப்பேன்" என்று பலமுறை துரை அவளிடம் சொல்லியிருக்கிறான். அவ்வளவு அழகு வாய்ந்த கன்னங்கள், ஒளிசிந்தும் மாம்பழக் கதுப்புகள். அந்த அழகு சிங்காரியின் மடியிலே இருப்பது அவனுக்கு வர்ணிக்க வொண்ணாத பெருமை. சந்திர மண்டலத்துக்குப் போகவேண்டுமென்று யாரோ எப்படி யெப்படியெல்லாம் கஷ்டப் படுகிறார்கள்; ஆனால் நானே சந்திரமண்டலத்திலேயே வாழ்கிறேன்— என்று அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே துரை எத்தனையோ முறை சொல்லி, அதற்கு தண்டனையாக, அவன் விரல்களை அவள் எச்சில் படுத்தியிருக்கிறாள். அந்த ஒரு நொடி அணைப்பிலே, அந்த இன்ப நிகழ்ச்சிகள் எல்லாம் வந்து வந்து போயின. அவர் கருவலிமை சேர்த்தன. விட்டதற்கு முன்பே அந்தத் தெவிட்டாத தெள்ளமுது, தன் முகத்தை அவளிடமிருந்து பிரித்துக் கொண்டு,

"அத்தான்!" என்றாள்.

"அமுதே!" என அவன் அழைத்துக் கொண்டான் மனதிற்குள்ளாகவே! அப்படி அழைப்பதை அந்த மென்மையான முத்தத்தின் மூலமாகக் காட்டிக் கொண்டான். 'நீங்கள் எப்படியத்தான் இங்கு வந்தீர்கள்?"

இந்தக்கேள்விக்குப் பிறகே, துரை தன்னையுணர்ந்தான். இதே கேள்வியை அவன், பரிமளாவைக் கேட்டிருக்க வேண்டும்—ஆனால் கேட்காமல் இதுவரையில் இருந்துவிட்டான்.

மலரைக் கண்டதும் மங்கை சூடத்தான் எண்ணுகிறாள், எப்படி இங்கே வந்தது என்று கேட்பது, பிறகுதான்!

கனியைக் கண்டதும் வாய் ஊறுகிறது! எப்படிக் கிடைத்தது எனக்கேட்கும் யந்திரம் தாமதமாகத்தான் வேலை செய்கிறது, மனித உடலில்!

அதுபோலத்தான் - பரிமளாவைக் கண்ட துரை, சொக்கி விட்டான்—சுவைத்தான்—பிறகு நினைத்தான் 'எப்படி வந்தாள்?' என்று கேட்க! கேட்டும் வைத்தான்.

"நேற்றைய நிகழ்ச்சியின் தொடர்ச்சி" என்றாள் அவள்.

"எனக்கும் அப்படித்தான்- இதுவும் நேற்றைய நிகழ்ச்சியின் தொடர்ச்சி தான்!" என்றான் துரை.

ஃ ஃ ஃ

துரையின் தோழர்கள், ஐயப்பன்கோஷ்டியாரிடம் "இனிமேல் இதுமாதிரி கள்ளத் தோணி காரியங்களில் ஈடுபட்டால் அவ்வளவுதான்! இப்போது தலைதப்பியது பெரிய காரியம் என்று ஓடிவிடுங்கள்" என்று மிரட்டவே, ஐயப்பனும், அவர்கள் காலிலே விழுந்து, "சாமீ! உங்களுக்கு கோடிபுண்யமுண்டு! நாங்க வர்ரோம்-இனிமே இந்தக் காரியம் செய்யமாட்டோம்— அந்தக் கிழவரையும் எடுத்துக் கொண்டு போகிறோம்—தயவு செய்து கொடுங்கள்" என்று பணிவாகக் கேட்டான். ஐயப்பனுக்கு அந்தக் கிழவரைக் கொண்டு போவது, மருங்கப்பள்ளத்துப் புதையல் முழுவதையும் கொண்டு போவது போல! ஆனால் அத்தகு அனுமதி கிடைக்கவில்லை. கிழவரைத் தர முடியாது என்று துரையின் தோழர்கள் கூறி விட்டார்கள். போலீசாரிடம் அதிகமாக பேச்சு வைத்துக் கொள்ளக்கூடாது எனப் பயந்த ஐயப்பன், தன் ஆட்களுடன் நடையைக்கட்டினான். துரையின் தோழர்கள், மயக்கம் தெளியாமல் இருக்கும் கிழவரை மெதுவாகத் தூக்கிக் கொண்டு மனோராவிற்குள் நுழைந்தனர்.

ஃ ஃ ஃ

துரையும், பரிமளாவும்கடற்கரை மணற்பரப்பிலே தோளோடு தோள் சாய்ந்தவாறு மனோராவை நோக்கி நடந்தனர்.

## கருணாநிதி

[12-ம் பக்கம் பார்க்க]



# குறளோவியம்

"தெய்வந் தொழா அள் கொழுநற்
றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."

இந்தக் குறளுக்கு உரை யெழுதிய பலரும் தவறான உரையே எழுதியிருக்கிறார்கள்.

"தன் கணவனுக்கு மேலான தெய்வம் ஒன்றில்லை என்ற எண்ணமுடன் கணவனைத் தொழுது வணங்குகிறவள் பெய் யென்று கூறினால் மழை பெய்யும்"

இத்தகைய உரைகளும், இதனினும் பிற்போக்கான கருத்தை விளக்கும் உரைகளும் இந்தக் குறளுக்குத் தரப்பட்டிருக்கின்றன. கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இந்தக் குறளுக்குத் தந்துள்ள உரைதான் பொருத்தமுடையது என அறிவுலகம் ஏற்க முடியும்.

"பெய்யெனப் பெய்யும் மழை" என்பதற்கு, பெய்ய வேண்டுமென்று சொன்ன மாத்திரத்தில் பெய்யக் கூடிய மழை என்றுதான் பொருள் கூறமுடியும். கணவனே தன் தெய்வமெனக் கொண்டவள் மழையைப் போன்றவள். யாருக்கு? அவளது கணவனுக்கு அவள் மழை போன்றவள். அதுவும் எத்தகைய மழை? பெய்ய வேண்டுமென்று கூறிய மாத்திரத்தில் பெய்யக் கூடிய மழையைப் போன்றவள்.

கழனி, காய்ந்து கிடக்கிறது—கதிர், நீர்தேடி வாடுகிறது— அந்த நேரத்தில் உழவன் வான்நோக்கி நிற்கிறான்—மழை பொழியவில்லை—உழவன் வாடுகிறான்—வேதனை கீதம் பாடுகிறான்—

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்
சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை."

எல்லாம் வல்லதல்லவா மழை. அத்தகைய மழையின்றி மனிதன் வாழ முடியுமா? உலகத்தை உய்விக்கும் மழையை மகளிரோடு ஒப்பிடும் அழகே அழகு! அந்த அழகை—வள்ளுவர் தந்த உயர் உபமானத்தை—உரை எழுதியோர் கெடுத்தனர்.

கழனிக்கு மழை தேவை என்று உழவன் நினைத்தபோது உடனே மழை பொழிந்துவிட்டால்—அந்த மழை எத்தனை குடும்பங்களின் நல்வாழ்வைப் பெறுகிறது—பெய்யெனப் பெய்யும் மழை பெறுகிற புகழ்மாலைகள் எண்ணிலடங்கா!

அதுபோன்றவளாம், கணவனையே தெய்வமாகக் கருதும் பெண்-அந்தக்கருத்தைத்தான் வள்ளுவர் வண்ணத் தமிழிலே குழைத்துத் தருகிறார்-மீண்டும் ஒருமுறை படியுங்கள்.

"தெய்வந் தொழா அள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

— நிதி —

# தாயகம் பிரித்தார்...

[11-ம் பக்க தொடர்ச்சி]

மாதமே உலக வல்லரசுகளிடேயே பூசல்கள் ஏற்பட்டு உலகப்போர் துவங்கியது. அப்போதுஅவுங்சான் மோல் மேன் மாநாட்டில் பேசியபடி ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில்,

“நமது நாட்டை நாமே ஆள வேண்டுமென்று கேட்பதற்கு நல்லதோர் தருணம் நமக்கு இப்போதுதான் கிட்டியிருக்கிறது. அதை நழுவவிட்டுவிடக்கூடாது. ஆகவே இந்த இரண்டாவது உலகப் போரில் பிரிட்டிஷாருக்கு பணமோ, படையோ, கொடுத்துதவக் கூடாதென்று டோபமா கட்சியின் சார்பாக பர்மியர்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.’ என்று குறிப்பிட்டிருந்தார். இதுகண்ட அரசாங்கம் 1940ல் அவுங்சான் மீது இராச துரோகக் குற்றத்தைச் சுமத்தி அவருக்கு ஒருவாரண்டை பிறப்பித்தது. அரசாங்கத்தார் கையிலே சிக்கினால் லட்சியம் சிதைந்து விடுமென்றெண்ணி அவுங்சான் ஜப்பானுக்குப் பயணமானார்.

## இரு துருவங்கள் சந்திப்பு

1941 டிசம்பரில் ஜப்பான், ஆங்கிலோ அமெரிக்கர் மீது போர் தொடுத்தது, “பர்மாவில் வாழும் வெள்ளையர்களை ஜப்பானியர்கள் துணைகொண்டு விரட்ட வேண்டும்; இப்போது நடக்கும் யுத்தம் பர்மாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் யுத்தம். எனவே பர்மியர்களே ஜப்பானுக்கு ஆதரவளியுங்கள்” என்று அடிக்கடி பர்மியர்களுக்கு அவுங்சான் ரேடியோ மூலம் சொற்பொழிவாற்றி வந்தார்.

பர்மியர்களின் ஒத்துழைப்பால் 1945 மார்ச்சில் இரங்கூன் நகரம் ஜப்பானியர்கள் வசமானது. இரங்கூனைக்கைப்பற்றிய ஜப்பானியர்கள் 1943 ஆகஸ்ட் முதல்நாள் பர்மாவுக்கு சுதந்திரம் கொடுத்தார்கள். அவுங்சான் பாதுகாப்பு மந்திரியானார். எனினும் மீண்டும் மேமீ பர்மா வெள்ளையர்வசமாயிற்று. சுதந்திரம் நிலைக்கவில்லை. நாள் ஆக ஆக பர்மாவின் அப்போதைய நிர்வாகக் கௌன்சிலர்கள் மீது பொது மக்களுக்கு நம்பிக்கையில்லாதிருந்தது, நாட்டில் கொள்ளையும் கொலையும் அதிகரித்தன; வேலை நிறுத்தங்கள்வளர்ந்தன.போலீசார் உள்பட எல்லா சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் வேலை நிறுத்தம் செய்தனர். இந்தக் குழப்பத்தைக் கண்டு திணறிய பர்மா கவர்னர் சர் ஹியூபர்ட் ரான்ஸ் இறுதியாக அவுங்சானைச் சந்தித்து கலந்து உரையாடி, 1946 செப்டம்பரில் அவுங்சானை உதவித் தலைவராகக் கொண்ட புதிய இடைக்கால சர்க்காரை நிறுவினார். அவுங்சான் இடைக்கால சர்க்காரில் முக்கிய அங்கம் தாங்கிய பிறகு, பொது மக்களுடன் நேரடியான தொடர்புகொண்டு அன்பான வகையில் அவர்களுக்கு ஆறுதல் கூறி குழப்பத்தை அடக்கினார். சுற்றுப் பிரயாணங்கள் செய்து ஏழைகளுக்கு சுகவாழ்வு தருவதாக அவர்களிடம் உறுதி கூறி, அவர்களுடைய மனவேதனையை ஒழித்தார். அதன் பிறகு அவுங்சான் இந்தியர்வுக்கு வந்து நேரு பண்டிதரைச் சந்தித்தார். அப்போதுதான் பண்டிதா மேலே’ குறிப்பிட்டுள்ள பாராட்டைத் தந்தார்.

1947—ல் பர்மிய தூது கோஷ்டி ஒன்று லண்டன் நோக்கிப் புறப்பட்டு பெத்திக் லாரன்ஸையும், அட்லியையும் கண்டு பர்மாவின் சுதந்திரம் பற்றி உரையாடியது. அவுங்சானே தூதுகோஷ்டியின் தலைவராகச் சென்றார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இணைந்திருக்கப் பிரியப்படாதவர்களை பலவந்தப்படுத்தி சேர்த்து வைக்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. பர்மியர்களின் எதிர்கால வாழ்வை அவர்கள் தான் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்று அட்லி பர்மியத் தூதுகோஷ்டிக்கு எடுத்துரைத்தார். அவுங்சான், அட்லிக்கும் அங்கு வீற்றிருந்த பெத்திக்லாரன்ஸ். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், எ. வி, அலெக்சாண்டர் முதலியோருக்கும் நன்றி கூறுகையில் “நான் ஒரு தேசீயவாதி, அரசியல் உலகில் எனக்கு அநாவசியமான ஆசை கிடையாது. எங்கள் நாட்டைத் தான் நாங்கள் கேட்கிறோம். பர்மா சுதந்திரம் பெற்ற நாடாகி விடுமானால் பிரிட்டனுடன் என்றென்றும் நேசமாகவே இருந்துவரும் என்று பேசிமுடித்தார். அதன்பிறகு தூது கோஷ்டியினரும் அட்லியும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்கள். ஆம் இருதுருவங்கள் சந்தித்துஒரு மனதாக முடிவுக்கு வந்தனர்.

## விலங்கு முறிந்தது.

1947 ஏப்ரல் மீ, பர்மாவில் அரசியல் நிர்ணய சபைத் தேர்தல் நடந்தது. அவுங்கசான் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1947 ஜூன் எட்டு! பர்மிய நாட்டின் வரலாற்று ஏட்டிலேயே மிகமிக முக்கியத்துவம் பெற்ற நாள். அன்றுதான் பர்மாவில் முதலாவது அரசியல் நிர்ணய சபை கூடியது. இங்கிலாந்து மன்னர், காந்தி, நேரு, இராஜேந்திர பிரசாத், உள்பட அநேகரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. ஆனால் அவுங்சானின் அரசியல் பணியைப்பற்றி அவசரப் புத்திக்காரர்கள் கண்டனக் குரல்களைக் கிளப்பினர். அஞ்சவில்லை அந்தக் கர்மவீரன். ‘விரைவிலே பர்மாவைக் குடியரசாக்க பாடுபடுவேன்” என்று தான் உறுதி எடுத்துக் கொண்டார். ஆனால் அவுங்சான் பர்மா குடியரசானதைப் பார்க்கவில்லை — பார்க்கவிட வில்லை பர்மாவின் கோட்சேக்கள்!

ஆம். அஞ்சா நெஞ்சன் அவுங்சான், அரசியல் நிர்ணய சபையில் அமர்ந்திருக்கும் போது முன்னாள் பர்மாவின் முதலமைச்சரான ஊசோவின் குழுவினரால்சுட்டுக் கொல்லப் பட்டார். இன்றைய பர்மியக் குடியரசு அவுங்சானின் சமாதியின் மீது கட்டப்பட்டது தான் என்றாலும் அது மிகையாகாது.

பர்மா இன்று குடியரசு நாடாக பரந்த தாரணியில் நிறைந்த செல்வத்தோடு தலைநிமிர்ந்து தனியரசு செலுத்தி வருகிறது. தேசியத் தோழனே, 262000 மைல் பரப்பையும் 1500000 மக்களையும் கொண்ட பர்மா தனியாட்சி நடத்தும் போது, 1250000 மைல் பரப்பையும், 7,32,41462 மக்களையும் அத்துடன் வற்றாத ஜீவநதிகளையும் வளம் குன்றா வயல்களையும் நிகரற்ற தோள்வலிமையும், இணையற்ற அறிவாற்றலும் கொண்ட திருநாடு-தன்னையும் தன் மக்களையும் மறந்து பொன்னையும் பொருளையும் வேற்றுநாட்டாருக்கு வாரி ஈந்த பொன்னாடு—சேரன் செங்குட்டுவன் செம்மல்பாண்டியன் செங்கோலோச்சிய திராவிடநாடு-கலிங்கப் போரிலே குருதியைக் கொட்டி அசோகன் இதயத்தையே மாற்றி அமைத்த வீர நாடு-தனித்து வாழமுடியாதா? விலங்கொடித்த பர்மா விடுதலை கோரும் திராவிடத்துக்கு ஓர் நற்சான்று.

★

★ முரசொலி ★

பொங்கல் மலர்

எண்ணங்களை எழுதுங்கள்!

முரசொலி பொங்கல் மலரை திராவிடம் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்பதை நாமறிவோம் அதன் சிறப்புக்கள் என்ன—என்ன—என்ற விளக்கங்கள் தரத்தேவையில்லையென்றே கருதுகிறோம், “முரசொலி — பொங்கல் மலர்’’—இந்தச் செய்தியே உங்களுக்கு இனிப்பூட்டக்கூடியது—மலர் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற எண்ணங்களை எழுதுங்கள்—இயன்ற வரை செயலாற்றி உங்கள் சிந்தை மகிழவைக்கிறோம்.—அத்துடன்,

**மலர், எவ்வளவு ரூபாய் விலையில் வெளியிடலாம்** என்ற கருத்தையும் உடன் எழுதுங்கள்-இதுமிக முக்கியம். உடன் தெரிவியுங்கள்.

பொறுப்பாளர்
பொங்கல் மலர்
முரசொலி
சென்னை—14

★★★★★★★★★★★★★★

## புதிய ஞானோதயம்!

★

புதுஉலகு அமைக்க அதுவும், சுயமரியாதை உலகாக அமைக்க, முதலில் வறுமையும். தீண்டாமையும் ஒழிய வேண்டுமென நாம் பலமுறை சொல்லி வந்திருக்கிறோம். புதரை அழித்து, நல்லதோர் பூங்காவை நிர்மாணிக்க எண்ணினால், புதரிலே வாழும், கருநாகங்கள் சீறித் தான் பாயும் எனபதையும் நாம் முன்கூட்டி எச்சரிக்கத்தான் செய்திருக்கிறோம். நாத்தீகர்கள் என்றுகடிந்துரைத்தார்கள் அப்போது. ஆனால் யூனியன் மந்திரி ஜகஜீவன்ராம் இப்போது தான் ஞானோதயம் பெற்று அதே கருத்தை அண்மையில்டில்லியில் கூடிய ஒரு மாநாட்டில் கூறியிருக்கிறார், படியுங்கள்:


‘முன்னேற்றமும் சுபிட்சமும் நிறைந்த புதிய சமுதாய அமைப்பு உருவாக வேண்டுமானால் தீண்டாமையும் வறுமையும் ஒழிந்தாக வேண்டும்.

சமூக அபிவிருத்திக்கான முற்போக்கு நடவடிக்கை எதையாவது ஆரம்பித்தால் சுயநல கோஷ்டியினர் எதிர்க்கின்றனர். ஹிந்து சட்டத் தொகுப்பு மசோதா, நிலச்சீர்திருத்தங்கள் முதலியவற்றை இக்கோஷ்டியினர் எதிர்ப்பதைப் பார்க்கிறோம்.

உயர்ந்த அந்தஸ்தில் உள்ள ஒரு சிலரின் நலனுக்காக லட்சோப லட்சம் மக்களின் நலனைப் பலியிட முடியாது.

அரசியல் பொருளாதார உரிமைகள் யாசகமாக கிடைக்க[illegible]ா; போராடியே பெற[illegible]யும்.’’

★★★★★★★★★★★★★




# ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை பூமியில்!

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

"ஏழை; பணக்காரன் என்ற வித்தியாசம் எங்கள் பள்ளிக்கூடத்தில் நிறைய இருக்கிறது அண்ணா; அதற்கு என்ன செய்து தொலைப்பது?" என்று முகந்தனூர் என்ற கிராமத்திலிருந்து செல்லம் என்ற தங்கை கேள்வி அனுப்பியிருக்கிறது.

பள்ளியில் மட்டுமல்ல: நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் அந்தப் பாழும் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்; காலப் போக்கில் அந்த வித்தியாசம் செத்தே விடும். அதற்கு ஒரே கருவி 'சுயமரியாதை'தான்!

அந்த சுயமரியாதையை விளக்கி சென்னைத்தம்பி கண்ணனிடமிருந்து கதை ஒன்று வந்திருக்கிறது. படியுங்கள்:

*ராஜன் அந்த ஊர் மிராசுதாரின் ஒரே மகன்— செல்லப் பிள்ளை — பள்ளிக்கூடச் சிறுவன். அவன் அந்த ஊர் பள்ளியில் ஆறுவது வகுப்பை முடித்து விட்டு, ஏழாவது வகுப்பிற்குப் படையெடுத்திருந்தான். அதுவும் மூன்றாவது முறையாக. உண்மைதான்; அவன் படிப்பில் பெரும் பூஜ்யம்!*

*ராஜனைக் கண்டால் அந்த பள்ளி மாணவர்களுக்கு அதிக பயம். அவன் அதிகாரம் அங்கு படித்து வந்த மாணவர்களை ஆட்டிப் படைத்தது ஏன் தெரியுமா? அந்தப் பள்ளியில் நிறைய ஏழை மாணவர்கள் இருந்தார்கள். பாவம்! அந்த ஏழைத்தம்பிகளை தன் வேலைக்காரர்களைப் போல மதித்தான் அவன். அப்படியே நடத்தவும் செய்தான். ஆசிரியரே அவனிடம் பயப்படுவார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!*

*என்னதான் மயிலின் இறகு லேசாக இருந்தாலும், அதை வண்டி நிறைய ஏற்றினால்...? வண்டியின் இருசு உடையத்தானே செய்யும்? அதை அந்த பணக்காரத் தம்பி — ராஜன் ஏனோ உணரவில்லை!*

*எத்தனை நாளைக்குத்தான் ஏழைப் பையன்கள் அவனுக்கு அடங்கிக் கிடப்பார்கள்? அவர்களுக்கும் சுயமரியாதை இல்லாமலா போய்விடும்? நாளாக ஆக — ராஜனின் அட்டகாசம் அதிகமாக அதிகமாக - அவர்களின் பயமும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வந்தது.*

*ராஜனைக் கண்டால் அவர்கள் அலட்சியமாகப் பார்த்தார்கள். தனித்தனியே கிண்டல் செய்யவும் தொடங்கினார்கள்.*

*ஒரு நாள்......*

*பள்ளிக்கூடம் விட்டது. ராஜன் வீட்டிற்குப் புறப்பட்டான். தன் புத்தகப் பையை வண்டியில் கொண்டுபோய் வைக்கும்படி 'கட்டளை'யிட்டான் ஒரு தம்பிக்கு. அவன் பேசாமல் இருந்தான். ராஜன் அதட்டினான். "நான் என்ன, உன் வேலைக்காரனா?" என்று கேட்டுவிட்டான், அந்தத் தம்பி.*

*'சுருக்' கென்றது ராஜனுக்கு. சிறுவர்களின் திடீர் மாற்றத்தைக் கண்ட அவனுக்கு ஆத்திரம் பொங்கியது; கோபம் பீறிட்டது. "என் மதிப்பை உணராத நாய்களே! இருங்கள்; உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்" என்று முணுமுணுத்தான். வழக்கத்துக்கு மாறாக தன் கைகளாலேயே புத்தகப் பையை எடுத்துக் கொண்டான். வீட்டுக்குப் போனான்.*

*துள்ளிக் குதித்து ஓடிவரும் தன் மகன், இன்று தேள்கொட்டியவனைப் போல வருவதைக் கண்டார் பணக்கார அப்பா. அவர் உள்ளம் படபடத்தது. என்றுமில்லாத பயம் சூழ்ந்தது அவரை. "என்னடா ராஜா?" என்று அவனது ரோஜா கன்னத்தைத் தடவிக் கொண்டே கேட்டார்.*

*"அப்பா! பேருக்குத்தாம்பா நாம் பணக்காரங்க. இப்போ என்னையாரும் மதிக்கிறதே யில்லேப்பா! நான் வண்டியை விட்டு இறங்கும்போது கையை கட்டி நின்னவன்கள் — நான் என்ன சொன்னாலும் தட்டாமெ செய்தவன்கள் எல்லோரும்*

[ 10-ம் பக்கம் ]

## ★ முத்துவும் செல்வியும் ★

### 6. குறும்புக்குப் பரிசு!

*பாம் பாம்...பாம் பாம்...*

*என்னவோ ஏதோ என்று நினைத்து விடாதீர்கள். வழக்கம்போல் முத்துவும் செல்வியும் தங்கள் துருதுருத்த கைகளால் 'கடமை'யைச் செய்து கொண்டிருந்தார்கள்.*

*வாசலில் 'கார்' கிடந்தது. கேட்க வேண்டுமா? 'ஹாரன்' படாதபாடு பட்டுக் கொண்டிருந்தது.*

*பாம்...பாம...*

*"அடடா! யாரப்பா அது?"*

*எங்கிருந்தோ கிளம்பியது இந்தக் கோபக் குரல். திடுக்கிட்டுப் பார்த்தார்கள் முத்துவும் செல்வியும். மறுகணம் 'களுக்' கென்று சிரித்து விட்டார்கள். ஏன் தெரியுமா? காருக்கு அடியில் அவர்கள் கண்ட காட்சிதான்! அங்கே...தன் பெருத்த உடலை அசைக்க முடியாமல் அசைத்துக் கொண்டு, காருக்கு கீழே இருந்து, தடுமாறி தத்தளித்து வெளியே வந்து கொண்டிருந்தார் டிரைவர் ரங்கண்ணா! ஏதோ 'ரிப்பேர்' செய்து கொண்டிருந்தார் அவர். ஆனால், இந்தக் குறும்புக்காரர்கள் சும்மா இருக்கிறார்களா, என்ன?*

*மீண்டும் 'ஹாரன்' அலறியது. ரங்கண்ணாவுக்குக் கோபமும் பொங்கியது. "அடடா நீங்கள்தானா? உங்கள் தொல்லை பெரிசா போச்சே! சும்மா இருக்க மாட்டீங்களா?" என்று கத்தினார். ஹாரன் ஓயவில்லை.*

*ரங்கண்ணா எழுந்தார். அவர்களைப் பிடிக்க வந்தார். அவர்கள் சிட்டுபோல் பறந்தார்கள். ரங்கண்ணாவும் யானைபோல் துரத்தினார். அங்கே ஒரு ஓட்டப் பந்தயமே நடந்தது! முடிவில் முத்துவும் செல்வியும் அகப்பட்டுக் கொண்டார்கள். ரங்கண்ணாவுக்கு பெருமூச்சு வாங்கியது. "உங்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு நான் ரிப்பேர் செய்து வாழ்ந்தாப் போலத்தான்" என்று சொல்லிக் கொண்டே அவர்களை இழுத்துக் கொண்டு நடந்தார். வீட்டிற்குள் நுழைந்தார். வாசல் புறத்தில் இருந்த அறையைத் திறந்தார். இரண்டு பேரையும் உள்ளே அனுப்பினார். "வேண்டாம்; வேண்டாம்" என்ற இருவரும் கத்தியதைக்கூட அவர் கவனிக்கவில்லை. கதவைச் சாத்தினார். வெளிப்புறம் தாழ்ப்பாளைப் போட்டார். பெரிய காரியத்தைச் சாதித்து விட்டாரல்லவா?– வீரனைப்போல நடந்தார். மீண்டும் காருக்கு வந்தார், ரிப்பேரை முடிக்க.*

*கொஞ்ச நேரம் சென்றது. பக்கத்து வீட்டுக்குச் சென்றிருந்த பாட்டி வீடு திரும்பினார்கள். வரும்போதே "எங்கே ரங்கன், குழந்தைகள்?" என்று கேட்டு வைத்தார்கள்.*

*"குழந்தைகளா? அறைக்குள்ளே கைதி களாக்கி வச்சிருக்கேன்..."*

*"அறைக்குள்ளேயா?"—பாட்டி பரபரப்புடன் கேட்டார்கள்.*

*"ஆமாம்மா! உள்ளே அனுப்பி, வெளியே தாழ்ப்பாள் போட்டு விட்டேனே!" —சிரித்தபடி சொன்னார் ரங்கண்ணா.*

*"அடடா! போச்சே மோசம்!" என்றார்கள் பாட்டி. வேகமாக அறையை நோக்கிச் சென்றார்கள். ஒன்றும் புரியாத ரங்கண்ணாவும் பின்னால் ஓடினார்.*

*பாட்டி அவசர அவசரமாக அறைக் கதவைத் திறந்தார்கள். அங்கே...? அவர்கள் எதிர்பார்த்து வந்தது நடந்தே விட்டது. 'குஷன்' நாற்காலியில் 'குஷாலாகச்' சாய்ந்து கொண்டு, கையிலிருந்த ஆப்பில் பழங்களைச் சுவைத்துக் கொண்டிருந்தார்கள், முத்துவும் செல்வியும்! ஊருக்கு அனுப்புவதற்காக பாட்டி அவர்களின் கண்களுக்குத் தெரியாமல் பத்திரமாக வைத்திருந்த பழங்கள் அவை.*

*பாட்டிக்கு எப்படி இருக்கும்? "பொல்லாத பிள்ளைகளா!"— அதற்குமேல் அவர்களால் பேசமுடியவில்லை. ஆனால், முத்துவும் செல்வியுமோ, "வணக்கம், டிரைவர் சார்! உங்கள் உதவிக்கு ரொம்ப ரொம்ப நன்றி" என்று சிரித்தபடி சொல்லிக் கொண்டே, ஆப்பில் பழங்களுடன் ஓடினார்கள். ரங்கண்ணா மவுண்ட்ரோடு 'மன்றோ' சிலையானார்!*



# மங்கையர்க்கு அரசி

கவிஞர் சிரதா

## வைகறை

ஒருநாளின் பின்பகுதி, ஒய்வால்; காதல்
உறக்கத்தால் ஓடிற்று எங்கோ! மீண்டும்
வரும்நாளில் எதுசெய்தல் வேண்டும்? வாழ்க்கை
வளர்வதற்கு வழிஎன்ன! என நினைப்பேன்.
திருந்திவரும் தமிழ்நாட்டை, பக்தி ஊட்டித்
திருப்பிவரும் கிழமூளைக் காரர் தம்மை;
உரித்தவிதை போல்ஆக்க வேண்டும் என்று
வைகறையில் தீர்மானம் செய்து கொள்வேன்.

## காலை

உரைகல்லில் சரிபார்த்த பொன்னைப் போல
ஒளிவீசும் காலையிலே எழுந் திருந்து;
நுரைக்குற்றம் நீங்காத நதியை நோக்கி,
நீராடச் சென்றிடுவேன். நமது முன்னோர்
உரைத்தபடி, நீர்மீது உமிழேன். நீரில்;
உடுத்துள்ள ஆடைதனைப் பிழிய மாட்டேன்.
கரைஏறி, இல்லத்தை அடைந்து, மீண்டும்
கடமைதனைத் தளராமல் தொடர்ந்து செய்வேன்.

## நண்பகல்

வீண்பேச்சு; கோள்மூட்டல்; இதனைப் போன்ற
வேலைதனில் ஈடுபடும் பெண்டிர் கூட்டம்;
தூண்அன்றோ! மரமன்றோ! மழைநீர் பட்டுத்
துருப்பிடித்த இரும்பன்றோ! இவர்கட் கெல்லாம்,
ஆன்றோரை நினைவூட்டி, அறிவில் முத்த
ஔவையைப்போல் அறிவுபெறும் மார்க்கம்சொல்வேன்
நீண்டபல பிரசங்கம்; வருவோர்க் கெல்லாம்
நண்பகலில் பலதினங்கள் நடத்தி வைப்பேன்.

## மாலை

பலர்போல, பகலில்நான் உறங்க மாட்டேன்.
பகல் உறக்கம் உயிர் குறைக்கும் என்ப தாலே!
கலைநூற்கள் பலபடிப்பேன். தினமும், வீட்டுக்
கணக்குதனை எழுதிவைப்பேன். மாலைப் போதில்,
தலைவாரிப் பூச்சூடி; பொட்டு ஒட்டித்
தமிழ்க்காதல் துரைவருவார் என்று; வீட்டு
நிலைவாசல் முன்வந்து எட்டிப் பார்ப்பேன்,
நீந்திவரும் வான்நெருப்பு என்னைப் பார்க்கும்.

## எற்பாடு

சொல்நிறைந்த தமிழ்நாட்டில், எற்பா டென்று
சொல்லிவரும் கதிர்மறைந்த நேரந் தன்னில்;
நல்விளக்கு தனைஏற்றி. இருட்டு தன்னை
நறுக்கென்று மறையவைப்பேன். 'அரும்பே!' என்று
செல்லமுடன் என்மகனை அழைத்து; அன்னோன்
செங்கரத்தில் சுவடிதனைத் தருவேன். மைந்தன்,
வெல்லத்தை வென்றுவரும் குரலால்; ஏட்டை
வாசிப்பான். அதுகேட்டுக் குளிர்ந்து போவேன்.

## யாமம்

நொச்சிப்பூ உதிரும்யா மத்தில், எந்தன்
நித்திரையை என்கணவர் விரல் கலைக்கும்.
நச்சரிப்பார். எச்சரிப்பேன். என்பக் கத்தில்
நகரென்பார், நான்மறுப்பேன். ஊடல் தீர்ப்பார்.
இச்சமயம் நிலவேது? இருள்தான்;. என்பேன்
'இருள்தானே பூனைக்கு வேண்டும்' என்பார்.
உச்சரிக்கும் உதடுதனைத் தருவார். ஈர
உடைபோல, அவர்மீது ஒட்டிக் கொள்வேன்.

## என்ன விநோதம் பார்!

★

கல்லக்குடி, திராவிடத்தையே களிப்பிலாழ்த்தியிருக்கிறது!

ஆனால்

வடநாட்டு தினமணியோ போலிவாதங்காட்டி மறுக்கப்பார்க்கிறது!

நமது விடுதலையோ பூரிப்படையவும் தயங்குகிறது—

## சினிமா நியூஸ்.

★

தோழர் கலைவேந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட, 'சினிமாநியூஸ்' என்ற மாதமிருமுறை இதழைக் கண்ணுற்ருேம்.

வயிற்றெரிச்சல் காரர்களும்—இடந்தேடிகளும் — கிடைத்த இடத்தை விட்டுவிட்டு நொந்துபோன சந்துமுனை சிந்துபாடிகளும்—கூட்டாகச் சேர்ந்து சினிமாக்கலையை வளர்ப்பதாகக் கூறிக் கொண்டு ஏடுகள் மூலம் தங்கள் சிறுமதியை எடுத்துக் காட்டும் இந்த நேரத்தில், அறிவுக் கருத்துகளுக்கு ஆக்கம் தரும் சினிமா நியூஸின் வருகையை நாம் பாராட்டுகிருேம்—அருமையான இதழ்! அழகான படங்கள்! அறிவூட்டும் கட்டுரைகள்!

விலை அணு—2

## கொள்கை விருந்து கோபுரம் போலே!

★

### சேத்துப்பட்டு—சென்னை.

தேதி : 24—10—54

பேசுவோர்

மு. கருணாநிதி,
கி. மனோகரன்
கா. அப்பாதுரை
வே. சுப்பிரமணியன்.

### வாலாஜா

தேதி : 24—10—54

பேசுவோர்

காஞ்சி. கல்யாணசுந்தரம்
எஸ். எஸ். தென்னரசு
முகவை. ஆர். எஸ். பாண்டியன்
மு. புரட்சிமணி
ரத்தினவேலு

## அழகிரி நாடக மன்றம்

★

அழகிரி நாடகமன்றத்தின் துவக்க விழா 24—10—54 அன்று காலை 9-மணிக்கு இராயப் பேட்டை நல்லெண்ண முதலி தெருவில் நடைபெறும். தோழர் கோ. இளவரசு தலைமை தாங்க, தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் மன்றத்தை துவக்கிவைப்பார்.

## பிறைவானம்...

[ 9-ம் பக்கத் தொடர்ச்சி ]

இப்போ என்னை எதிர்த்துப் பேசருங்கப்பா! நான் இனிமே அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போக மாட்டேம்பா" என்ருன் ராஜன். அவனுக்கு அழுகையே வந்துவிட்டது.

அப்பா சிரித்தார். "உனக்கு அடங்கியும், சொன்னதைக் கேட்டும் வந்தார்கள் அல்லவா? அப்போது அவர்கள் கோழைகள்! இப்போது அவர்கள் தங்களைத்தானே உணர்ந்து கொண்டு விட்டார்கள். நீயும் மனிதன்; அவர்களும் மனிதர்கள்தானே! அவர்கள் நம்மிடம் அடங்கி ஒடுங்கி நடந்ததால் தான் நாம் 'உயர்ந்தோர்'கள் ஆனோம். இன்று அவர்கள் நம்முடன் சமமாக இருக்க விரும்புகிருர்கள். தவறென்ன அதிலே? விரட்டும் நாய் ஓடும் நாயைக் கண்டதும் தன்னை உயர்ந்தவனுகக் கருதும். ஆனல், ஓடும் நாய் திரும்பித் துரத்தினல்..? விரட்டும் நாய் பயப்படத்தானே செய்யும்? அந்தநிலைதான் நம்முடையதும். தெரிகிறதா?" என்ருர் அப்பா!

நின்ற இடத்திலேயே சிந்திக்க ஆரம்பித்தான், ராஜன். உண்மையையும் புரிந்து கொண்டான்.

ஃ ஃ ஃ

நீங்களும் சிந்தியுங்களேன், ராஜனின் அப்பா சொன்னது உண்மை தானே!

—சொர்ணம்

## நேரு போல...

[4-ம் பக்க தொடர்ச்சி]

இனி யார் இருக்கிருர்கள்? அந்தோ; பரிதாபம்! — அடுத்த ஆள் இல்லாமலே தனித்து வளர ஆசைப்படும் தலைவர்களின் இயக்கமெல்லாம் இப்படித்தான் தலையிலே கை வைத்துக் கொண்டு கதற நேரிடும்!—அந்த நிலைமைக்கோர் நல்ல எடுத்துக் காட்டு இந்த சூழ்நிலை!

[குடந்தை— இளைஞர் தமிழ் மன்ற விழாவில் 17—10—54 அன்று மாலை தோழர் கருணாநிதி ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது]

# பொது வாழ்வு

## தாயகம் பிரித்தார்-தனியரசு கண்டார்!

★

"நண்பர் அவுங்சானின் இனப்பற்றை பாராட்டுகிறேன். அவர் எண்ணம் வெற்றியடைய — பர்மா சுதந்திரம்பெற நாம் பிரார்த்திப்போமாக"

ஒற்றுமை கீதம் என்பதின் பேரால் 'ஏகஇந்தியா, அகில பாரதம்' என்று ஏகாதிபத்ய வாதம் பேசும் பண்டித ஜவகர்லால்நேருதான் இந்தப் பாராட்டைத் தெரிவித்தார். எங்கோ ஓர்மூலையில், ஏதோ ஓர் கண்டத்தில், புதிதாகக் கண்டுப்பிடிக்கப்பட்ட நாட்டுக்காரருக்குச் சொன்ன பாராட்டுரை யல்ல இது. இந்தியத்துணைக் கண்டத்தோடு இணைந்திருந்த சின்னஞ்சிறு நாடாம், பர்மாவின் நலனுக்கு பாடுபட்ட ஒரு புரட்சித் தலைவனுக்குக் கூறிய பாராட்டுரைதான் மேலே தந்திருப்பது.

### விடி வெள்ளி

அவுங்சான்! ஜீவன் ததும்பும் பெயர்! உயிரோட்டமுள்ள சொல்! பாகிஸ்தானுக்கு ஒரு ஜின்னு அமைந்ததைப் போல பர்மாவுக்கு அவுங்சான்கிடைத்தார். 'வீழ்ச்சியுற்ற பர்மாவில் எழுச்சி வேண்டும், விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்' என்று பர்மாவின் புரட்சிக்கவிஞுகை பட்டிதொட்டிகளெல்லாம் முழக்கமிட்டார். 'நாடாண்ட நாம் இன்று நாயினும் கேடாக மதிக்கப்படுகிறோம்' என்று நாம் அழகு தமிழிலே கூறுவதைப் போல, அவுங்சான் பர்மாவிலே முழக்கமிட்டார். பர்மியத் தாய்மார்களின் கருவிலிருக்கும் சிசுக்களுக்கு எட்டும்படி கர்ஜனை செய்தார். அவருடைய இதய கீதமே இன்று பர்மாவை இன்ப புரியாக மாற்றி யமைத்திருக்கிறது, இளர்ச்சி வேளையில் அவுங்சான் சிந்திய கண்ணீரும் கொட்டிய செந்நீரும்பர்மாவின்வளர்ச்சிக்கு வளமாக அமைந்தது. எஃகு உள்ளம் படைத்தவர்களின் எலும்பை உரமிட்டு வளர்க்கப்பட்டதுதான் இன்றுள்ள பர்மிய சுதந்திர அரசாங்கம். நாடாளும் ஆசையால் வெள்ளையர்கள் நாக்குத்தட்டிக் கொண்டிருந்த காலத்தில், குறுநில மன்னர்களின் ஆதிக்கம் பர்மாவில் கூண்டோடு ஒழிக்கப்பட்ட நேரத்தில், பர்மியர்கள் வெள்ளையர்களோடு வாழ்வா, சாவா, என்று உத்வேகத்தோடு போரிட்ட வேளையில் அவுங்சான் அரசியல் பாதையில் குதித்தார்! வீரர் பண்டுலோ மீது அவுங்சானுக்கு அளவு கடந்த அன்பு. நிமிடத்துக்கு நிமிடம் பண்டுலோவை நினைத்து வருந்துவார் அவுங்சான்.

பண்டுலோ சிறந்த போர்வீரர் ஆங்கிலப் படையை நிர்மூலமாக்க வேண்டுமென்று ஆவேசதோடு போர் புரிந்தவர், அவர். ஆனால் மாவீரன் வாலியை இராமன் மறைந்திருந்து மாய்த்ததைப் போல் போர்க்களத்திலே ஒரு ஆங்கிலேயனல் கொல்லப்பட்டார் தளபதி பண்டுலோ. பண்டுலோ அன்று மடிந்திரா விட்டால் பர்மா பரங்கியரிடம் சிக்கியிருக்க முடியாது. இந்த நிகழ்ச்சி வரலாற்றையே மாற்றி அமைத்து விட்டது. இதைத்தான் நினைத்து நெஞ்சம் கலங்கினர் அவுங்சான்.

மாற்றானின் கையிலே சிக்கி, 'மருண்ட பார்வை; இருண்ட உள்ளம்' என்ற நிலையிலே வாழ்க்கை நடத்திய பர்மாவை அகண்ட உலகிலே ஆர்ப்பரிக்கும் நாடாக ஆக்க வேண்டும் —ஆக்க முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு அரசியலிலே பங்கு கொள்ள ஆரம்பித்தார் அவுங்சான். அவுங்சானின் அரசியல் பிரவேசம் பர்மாவின் எதிர்கால நல்வாழ்வுக்கு ஒரு விடி வெள்ளி என்பதை பர்மியர்கள் நன்குணர்ந்தார்கள்.

### புரட்சிப் புயல்

1937 ஏப்ரல் முதல் நாள்! இந்தியாவின் ஒரு மாகாணமாக இருந்த பர்மா அன்றுதான் தனியாகப் பிரிக்கப்பட்டது. பிரிவினையை பெரும்பான்மையான பர்மியர்கள் வெறுத்தார்கள். புரட்சி புகைய ஆரம்பித்தது. அப்போது முதலமைச்சராகஇருந்த டாக்டர் பாமா விடுதலை இயக்கங்களுக்கும் மாணவ கழகங்களுக்கும் தடை உத்தரவு பிறப்பித்தார். ஆயிரமாயிரம் பட்டம்பெற்ற கட்டிளங்காளைகள் புரட்சித் தீயில் குதித்தார்கள். 1938ல் அரசாங்க அலுவலகங்களின் முன்பாக அறப்போர் தொடுத்தனர். டாக்டர் பாமாவின் அரசாங்கம் அடக்குமுறையைக் கையாண்டது. "அடக்குமுறை அதிகரித்தால் எங்கள் ஆர்வம் அதிகமாகும்" என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும் என்று மூலை முடுக்குகளிலெல்லாம் முழக்கமிட்டார்கள். இதன் விளைவால் 80 மாணவர்கள் காயமுற்றார்கள். ஒருவர் பிணமானர். இந்தச் சோகச் சம்பவம் பர்மாவின் நல்லறிவாளர் பலரை புரட்சி இயக்கத்திற்கு உதவியளிக்கத் தூண்டியது. 'ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிக! அரசியல்திட்டம் ஒழிக!' என்ற ஆவேச ஒலிகள் வானைப் பிளந்தன. டாக்டர் பாமாவுக்கு கொடும்பாவி கட்டி இழுத்தார்கள். மக்கள் நலனைக் கருதாத மந்திரிகளின் படங்களை முச்சந்திகளில் வைத்து காரி உமிழ்ந்து தீயிட்டுப் பொசுக்கினர்கள். இதையறிந்த பர்மிய அரசாங்கம், களறியில் பங்கு கொண்ட மாணவர்களின் பெற்றோர்களுக்கு பயமுறுத்தல் கடிதங்களை அனுப்பியது. அந்த நேரத்திலே உதிரத்தைக் கொட்டி உடம்பிலே தியாக வடுக்களை ஏற்றுக் கொண்ட பர்மியர்கள் ஏராளம்.

புரட்சி இயக்கத்தை அடக்க முடியாத பர்மா ஆட்சி பீடம், அவுங்சானை அணைத்துக் கொண்டால் கலகம் ஒடுங்கி விடுமென தப்புக் கணக்குப் போட்டது. உயர்ந்த பதவி தருவதாகக்கூறி அவுங்சானுக்கு ஆசை காட்டியது. "பணத்துக்கும் பதவிக்கும் பல்லைக் காட்டும் சபல புத்திக்காரனல்ல நான். ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டி யாளும் உரிமையை எனக்குக் கோடுத்தாலும் உதைத்த காலை முத்தமிடமாட்டேன்!" என்று பதிலளித்து விட்டார் அவுங்சான். புரட்சி புகைந்து சுடர் விட்டெரிய ஆரம்பித்தது.

### உரிமைக் குரல்

பார்த்தவான்! இவர் புரட்சி இயக்க வாதிகளில் ஒருவர். 'பர்மா பர்மியருக்கே' என்பதையே ஜீவலட்சியமாகக் கொண்டடோபமா இயக்கத்தை நிறுவியவர் இவர்தான். அவுங்சான் அரசியல் புரட்சி செய்து கொண்டிருந்த அந்த நேரத்தில் பெற்ற தாய் நாட்டை, வளர்த்த பொன்னுட்டை மீட்கப் பாடுபடும் டோபமா இயக்கத்தின் வளர்ச்சி அவுங்சானின் மனதைக் கவர்ந்[illegible] அன்றுமுதல் அவர் அந்த இ[illegible]கத்தில் ஒரு அதிகாரம் பெ[illegible] உறுப்பினரானர்.

டோபமா இயக்க புரோமில் நடந்த[illegible] சான் செயற்குழு உறுப்பினராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1939-ல் டோபமா இயக்கத்தின் நான்காவது மாநாடு பேராசிரியர் சயாலூன் தலைமையில் மோல்மேனில் நடைபெற்றது. முதல் மூன்று மாநாடுகளும் எல்லா வகைகளிலும் சிறந்து விளங்கின.

மாநாட்டில் அவுங்சான் முக்கிய பங்கெடுத்துக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சைக் கேட்பதற்காக பல்லாயிரக்கணக்கான மக்கள் காத்துக் கிடந்தனர். அன்று அவுங்சான் கொட்டிய வீரக்கனல் தான் இன்று பர்மியர்களின் உள்ளங்களினின்றும் அகலாமலிருக்கிறது. "இன்றுநாம் கூடியிருப்பது, சென்று போன நாட்களிலேநாம்வாழ்ந்த விதமென்ன? -நமது நாடு இருந்த நிலையாது? இன்று இந்த இழிநிலைக்கு ஏன் வந்தோம் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதற்காகவே. அன்று உலாவினேம் உப்பரிகையிலே! இன்று, உதைபடுகிறோம் உதவாக்கரை வெள்ளையர்களிடம்! இந்தக் கேவல நிலையை ஒழித்துக்கட்ட முதலில் நம்மிடையே ஒற்றுமைவேண்டும். அப்போதுதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராட முடியும். அடுத்து நாம் செய்ய வேண்டிய வேலை, வரப்போகும் உலகப் போரிலே வெள்ளையர்களுக்கு உதவிபுரிய மறுக்க வேண்டும்." இது அவுங்சான் மாநாட்டுப்பேச்சு. மோல்மேன் மாநாட்டில் அவுங்சான் நிகழ்த்திய ஆணித்தரமான சொற்பொழிவும் அவர் காட்டிய வீர உணர்ச்சியும் அவரை கால்போக்கில் டோபமா இயக்கத்தின் பொதுச் செயலாளராக்கிற்று.

டோபமா இயக்கத்திற்கு செல்வாக்கு வளர்ந்து கொண்டு வருவதைக் கண்ட பர்மா அரசாங்கம் 'அவுங்சான், ஆட்சியைக் கவிழ்க்க சதித்திட்டம் தீட்டுகிறார்' என்று அவர் மேல் குற்றம் சாட்டி அவுங்சானுக்கு பதினறு நாள் சிறை தண்டனை கொடுத்தது.

1939-ல் பர்மா மந்திரி சபை மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பர்மாவும் மற்றவர்களும் பதவியை ராஜிநுமா செய்ய நேர்ந்தது. புது மந்திரி சபை கூடிய மறு

( 8-ம் பக்கம் )

### ஆதிக்க வெறி!

"பகல் கனவு காணுதீர் பர்மியர்களே, பகலவனின் ஆயுள் உள்ளவரை வெள்ளையர்களின் வெற்றிக் கொடி பர்மாவில் பறக்கும்"

—டல்ஹவுசி

பர்மிய அரசாங்கம் தூதுக்குழு மூலம் அப்போது கவர்னர்ஜெனரலாக இருந்த டல்ஹவுசியைக் கண்டு, தென் பர்மாவை தந்து விடும்படி கேட்ட போது டல்ஹவுசி மேற்கண்டவாறு பதில் சொன்னர்.


### உரிமைக் குரல்

"நான் ஒரு தேசீயவாதி; அரசியல் உலகில் எனக்கு அநாவசியமான ஆசை கிடையாது. எங்கள் நாட்டைத் தான் நாங்கள் கேட்கிறோம்"

—அவுங்சான்

1947 ல் பெத்திக்லாரன[illegible]க்கண்டு பேசிய பர்மிய [illegible]துக்குழுவில் ஒருவரான [illegible]வுங்சான் லண்டன் சீமான்[illegible]களிடம் சொன்னது இது.

# கடைசிப்பக்கம்



க. குமரன்-பிராட்வே - சென்னை.

(?) காமராஜரை, திராவிட முன்னேற்றக் கழகம் வலை போட்டுப் பிடிப்பதாக தினத்தந்தி கூறக் காரணம் என்ன?

எல்லாம் "பிசினஸ்"தான். பத்திரிகை விற்க வேண்டுமே! செக்ஸ் அப்பீல் போட்டு ஏடு விற்க வேண்டிய கேடு கெட்ட நிலைமைக்கு வந்துவிட்ட கடை கெட்டதுகள் எதையும் எழுதும் — எதையும் போடும் — கொஞ்சமாவது உண்மை கூறும் பண்பு, கலை உணர்வு உபமான உபமேயங்களைப் புரிந்து கொள்ளும் தமிழறிவு இருந்தால் இப்படியெல்லாம் 'கிறுக்கல்' வேலையிலும் 'பிராண்டல்' வேலையிலும் ஈடுபட மாட்டார்கள். என்ன செய்வது; நமது பாதையில் இவைகள் எல்லாம் காலில் ஒட்டும் தூசுகள்!

சம்பந்தன்-சென்னை.

(?) பெண்களைப் பற்றி தினத்தந்தி எவ்வாறு கருதுகிறது?

அதில் வரும் படங்கள், மரியாதை(!)வார்த்தைகள் இவைகளையெல்லாம் காணும் போது தினத்தந்தி, பெண்களை தாய்க்குலமாகவோ, அல்லது சகோதரிகளாகவோ கருதுவதாகத் தெரியவில்லை!

தி. கி. ஆதிமூலம்.
சிவிசி-பம்பாய்.

(?) ராசிபலன்-ஜாதகம்-எல்லாம் மக்கள் நலனுக்காக என்று என் நண்பர் வாதிடுகிறார்; உண்மைதானா?

உண்மைதான்—ஜாதகம் ராசிபலன் எழுதுகிறார்களே—அவர்களுக்கும் மக்கள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களைப் பராமரிக்க ஒரு பிழைப்பு வேண்டுமே!

காளிமுத்து-வழுக்கப்பாறை-
மதுக்கரை.

(?) தி. மு. கழகத்தை கலைக்காவிட்டால் சாகும்வரைஉண்ணா விரதம் இருக்கப் போவதாக ஒரு சாமியார் சரடு விட்டாரே- அவர் என்ன ஆனார்?

உண்ணாவிரதம் ஆரம்[illegible] விட்டார். எல்லா ஆகார[illegible]யும் கரைத்துக் குடிப்பது என்று முடிவு கட்டி குடிக்கும் விரதம் மேற்கொண்டுள்ளார் எனக் கேள்வி.

மலையான்-சென்னை.

(?) தி. மு. கழகத்தைப் பற்றி அவதூறாகப் பேசவும், எழுதவும், கேலிச்சித்திரம் தீட்டவும் சிலர் முற்பட்டிருக்கிறார்களே- அது சரிதானா?

என்ன செய்வது; எருமைகள் செந்தாமரைக் குளம் என்று பார்க்கின்றன. விழுந்து துவைக்கத்தான் வருகின்றன,

சி. செல்வத்துரை
எம். எச். ரோடு-பெரம்பூர்.

(?) முரசொலியை புத்தக வடிவில் வெளியிட முன்வருவீர்களா?-எம் கருத்தை ஏற்பீரா? அல்லது நீங்களும்... ஆவீரோ?

முரசொலி நூல் வடிவில் வராது—முரசொலி அலுவலகத்திலிருந்து 'முத்தாரம்' என்ற திங்கள் ஏடு நூல் வடிவில் வர இருக்கிறது.

'ஏதோ ஆவீரோ' என்று கேட்டிருக்கிறீர்களே; அப்படியொன்றும் இந்த ஏழை எழுத்தாணிக்கு தலைக்கனம் இல்லை அய்யா!

சுந்தரிமணாளன்-சென்னை-5

(?) கவர்னர் சம்பளத்தை குறைக்க கிளர்ச்சி நடத்த விரும்பும் தி. மு. க, 'முதல் தேதி நோக்கி'களான என். ஜி. ஓ. க்களின் பொருள் நிலைஉயர பாடுபடுமோ?

மேட்டை வெட்டித்தானே பள்ளத்தில் கொட்டி சமப்படுத்த வேண்டும்!

அ. துரை அரசு.
பாளையங்கோட்டை

(?) 'அப்பாவி' என்றால் யார்?

அதோ போகிறானே; அந்தப் பாவி என்று சொல்லத்தக்கவர்களும் 'அப்பாவி' போல வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ர. பகவதி-கோட்டாறு.

(?) ஒருவன் பேச்சாளி ஆக என்ன செய்ய வேண்டும் [illegible]லில்!

[illegible]க்காக ஒரு பாணி வகுத்[illegible]க்கொள்ள வேண்டும். என்ன சொல்லப் போகிறோம் என்பதை சிந்தித்துச் சொல்ல வேண்டும். "யாகாவாராயினும் நாகாக்க" என்ற குறளையாவது சரியாகப் படித்து வைத்துக் கொள்ள வேண்டும். நிறைய தெரிந்து வைத்திருக்கிறோம் என்ற தன் திறமையை மக்களுக்குக் காட்டுவதைவிட, மக்கள் தெரிந்து வைத்திருப்பதில் உள்ள நன்மை தீமைகளைப் பற்றி அவர்களிடம் விளக்க வேண்டும்.

ரங்கராசு -சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

(?) சினிமாக் கட்சித் தோழரே! உங்களை "சிலம்பை எடு" என்று எங்கள் விடுதலை ஆசிரியர் அழுது அழுது சொல்லியும்கூட ஏனய்யா கேட்காமல் இருக்கிறீர்?

சிலம்பை எடுக்கச் சொல்லி விடுதலை ஆசிரியர் விட்ட "ரத்தக் கண்ணீரை"ப் பார்த்துத்தான், இனிமேல் சிலம்பை எடுப்போம் என்று முடிவு கட்டி, சிலம்புச் செல்வமான சிலப்பதிகாரத்தை 'பூம்புகார்' என்ற பெயரிலே எடுக்கத் தொடங்கியிருக்கிறோம்

★

7-ம் பக்க தொடர்ச்சி

"அப்படியானால் அந்த அம்பலத்திடம் என்னுடைய பெயரைச் சொல்லி விட்டாயா?"

"சொல்வேன் என்று நினைக்கிறீர்கள்!—ஆனால் நான் சொன்னதாக அவர் நம்பியிருக்கிறார்-நான் யாருடைய பெயரைச் சொன்னேன் தெரியுமா?"

"யார் பெயர்?"

"நான் பள்ளிக்கூடம் போகும்போதெல்லாம் - என் பின்னாலே ஒரு கோஷ்டியை சேர்த்துக் கொண்டு, கும்மாளம் போடுவானே ஒருவன்"

"யார் அது?"

"அதற்குள் மறந்து போய் விட்டதா?-ஒருநாள் தெருவில் என்பக்கமாக வந்துசைக்கிளில் இருந்து வேண்டுமென்றே விழுந்தான்—அதற்காக என் கையில் இருந்த ஸ்கேலால் அவன் கன்னத்தைப் பார்த்து ஒரு அடி கொடுத்தேன்; அப்படி அடிகொடுத்த கைக்குப் போடுவதற்காக நீங்கள் வளையல் வாங்கி வந்தீர்கள்—அந்த வளையலை நான்போட்டுக் கொள்ள மறுத்து, அதற்காக நீங்கள் ஊடல் புரிந்தீர்கள்—உடனே நான் ஊடலைப்பற்றிய திருக்குறள் ஒன்றைச்சொல்லி, உங்களை சிரிக்க வைத்தேன்-"

"ஆமாம்-ஆமாம்" என்று தலையசைத்தான் துரை.

"இப்போது ஞாபகம் வருகிறதா-அவன் பெயர் என்னவென்று?"

"துக்காராம்! சைக்கிள் கடைக்காரன்—"

"ஆமாம்-அவன் பெயரைத்தான் சொல்லியிருக்கிறேன்—வெள்ளியம்பலம் அவனைத் தேடிப்பிடித்து - தங்கத்தைப் புதைத்த இடத்தைக் கேட்கப் போகிறார் - அவன் விழிக்கப் போகிறான்-நன்றாக உதை வாங்கப் போகிறான் - பெண்களைக் கண்டால் பல் இளிக்கும் வாலிபர்களுக்கு இப்படித்தான் பாடம் கற்பிக்க வேண்டும்—"

"நல்லவேலை செய்தாய் பரிமளம்!-"

"அதிருக்கட்டும் – நீங்கள் உங்கள் கதையைச் சொல்லுங்கள் அத்தான்!"

"உன்னிடமிருந்து பிரிந்து போனேனா; அது முதல் எனக்கு ஒரே சிந்தனை; அந்தக் கிழவர் யார் என்று கண்டு பிடித்து விடவேண்டுமென்று! அதற்காக என் தோழர்களைத் திரட்டினேன் – போலிப் போலீஸ் வேடம் போட்டுக் கொண்டோம். கள்ளத் தோணியைப் பிடிப்பதுபோல நடித்தோம். கள்ளவியாபாரி ஐயப்பன் முதலியோர் பிடிபட்டனர், கிழவர் கடலில் குதித்துவிட்டார். நானும் குதித்து அவரைக் காப்பாற்றினேன். இன்னும் அவருக்கு மயக்கம் தெளியவில்லை. ஐயப்பனிடம் விசாரித்தோம் அந்தக் கிழவர் யாரென்று! சரியான விபரம் கிடைக்கவில்லை, "ஊரிலே திரிந்து கொண்டு வேதாந்தம் பேசும் கிழவர்" என்று கூறுகிறார்களே தவிர--யாரும் சரியாகச் சொல்லவில்லை. பரிமளம்! எனக்கு என்னமோ—அவரைப் பற்றி நன்றாக விசாரிக்கவேண்டும் என்ற ஒரு ஆவல் எழுந்து விட்டது — அதைத் தெரிந்து கொள்ளாமல் நான் எதுவும் செய்யப் போவதில்லை!"என்றான் துரை.

"அப்படியா?" என்று அவன் பக்கம் கன்னத்தைத் திருப்பினாள் பரிமளம்—

"இதுதான் விதி விலக்காயிற்றே!" என்று 'இச்' ஒலி முழக்கினான் அந்தக் கிண்டற்காரன். அதற்குள், துரையின் தோழன் அவர்களிடம் ஓடிவந்து, "கிழவர் கண்விழித்து விட்டார்" என்று கூறினான்...

துரையும் பரிமளமும் மனோரா நோக்கி ஓடினார்கள், கிழவர் மிகவும் களைப்புற்ற நிலையில் கண்ணைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தார். துரையும், பரிமளாவும் எதிரே போய் நின்றார்கள்.

அவர்கள்மீது கிழவரின் கண் பாய்ந்தது — மங்கிய நிலா வெளிச்சத்திலும் அவரால் அவர்களைக் காண முடிந்தது—

[வளரும்]

[illegible]னிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.
[illegible]ன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.